உ
சிவமயம்



அமரர்

# உயர்திரு. ஆறுப்பிள்ளை கதிரவேலு

அவர்களின் சிவப்பேறு குறித்த

# நினைவு மலர்

28.07.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"
- தமிழ்மறை-



# திரு. ஆறுப்பிள்ளை கதிரவேலு


அவர்களின் சிவபதப்பேறு குறிக்கும்

# "நினைவு மலர்"

28.07.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின்

குலவிளக்காய்த் திகழ்ந்து,

எல்லோருடனும் அன்பையும்

நட்பையும் பேணி நின்று

எங்களை நல்வழிப்படுத்தி,

தனது உடல், பொருள், ஆவி

மூன்றையும் எங்களுக்காய்

அர்ப்பணித்த எமது அன்புத்

தெய்வத்தின் பாத கமலங்களுக்கு

இம் மலரினைச்

சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*இங்ஙனம்*
**பிள்ளைகள்**
(ஜேர்மனி, கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

தோற்றம்
20 . 04 . 1933



மறைவு
13 . 07 . 2013

அமரர்


# உயர்திரு. ஆறுப்பிள்ளை கதிரவேலு

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு விஜயமதில் ஆனதொரு ஆனியிலே
பூண்ட அமரபக்க பஞ்சமி திதியதனில்
நீண்டபுகழ் கதிரவேலு என்பான் சென்றடைந்தான்
வெண்டாமரை சொரியும் வெள்ளை விநாயகன் பாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

வானுலகு மண்ணுலகு வாழ மறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனை முகனைப் பரவி அஞ்சலி செய்கிற்போம்.

## தேவாரம்

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உன கழல் தொழுதெழுவேன்
கடல் தனிலமு தொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எனை ஆளுமாறு
ஈவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ உன தின்னருள்
ஆவடுதுறை அரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

நாடகத்தால் உன்னடியார்போல் நடித்துநானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகுத் தந்தருளெம் முடையானே

## திருவிசைப்பா

இடர் கெடுத்தென்னை ஆண்டு கொண்டென்னுள்
இருட்பிழம்பற வெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதி
அடல் விடைப்பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறியாமைப்
படரொளி பரப்பிப்பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலிய சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறு வாருலுகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

முழுமதியன்ன ஆறுமுகங்களும் முந்நான்காகும்
விழிகளின் அருளும் வேலும் வேளறு படையின் சீரும்
அழகிய கரமீராறும் அணிமணித் தண்டை ஆர்க்கும்
செழு மலரடியுங் கண்டானத் தவம்செப்பற் பாற்றோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

ஆதி முதனாளில் எந்தன் தாயுடலிலே யிருந்து
ஆகமலமாகி நின்று புவிமீதில்
ஆசையுடனே பிறந்து நேசமுடனே வளர்ந்து
ஆளழகனாகி நின்று விளையாடி
பூதலமெலாமலைந்து மாதருடனே கலந்து
பூமிதனில் வேணுமென்று பொருள்தேடி
போகமதிலே உழன்று பாழ் நரகெய்தாமலுன்றன்
பூவடிகள் சேர அன்பு தருவாவே
சீதை கொடுபோகுமந்த ராவணனை மாளவென்ற
தீரனரி நாரணன்தன் மருகோனே
தேவர்முனி வோர்கள் கொண்டல் மாலரி பிர்மாவுநின்று
தேட அரிதான வன்றன் முருகோனே
கோதை மலை வாழுகின்ற நாதரிடபாகம் நின்ற
கோமளியநாதி தந்த குமரேசா
கூடிவருசூரர் தங்கள் மார்பை இரு கூறுகண்ட
கோடை நகர் வாழவந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் செல்லர் வீதியில் வசித்த வீர செங்குந்தர் குல திலகம்

# உயர்திரு.ஆறுப்பிள்ளை கதிரவேலு

## அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்துமா கடல் இன்பமாய்ப் பெற்றெடுத்த முத்தெனவே மிளிருகின்ற ஈழவள நாட்டில் கற்றோரும் கவின் இவங்கு பெரியோரும் வாழ்ந்திருந்த யாழ் பாடிப் பரிசு பெற்ற யாழ்பதியினிலே சங்கிலி மன்னன் கொலுவிருந்து அரசாண்ட நல்லூரில் தமிழ்க்கடவுள் முருகனின் அடியவராம் வீரபாகு தேவர் வழிவந்த வீர செங்குந்த மரபுதனில் நல்லூரான் மணி ஒளி கேட்கும் செல்லர் வீதியிலே சீரோடும் சிறப்போரும் வாழ்ந்து வந்திருந்த ஆறுப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதியினரின் இளைய மகனாக கதிரவேலு எனும் பேராளன் இப்பூவுலகில் வந்து பிறந்தார்.

இவர் தனது வாழ்வில் மூத்த சகோதரனாக நல்லூரில் தவமிருந்து நல்லூர் முருகனுக்கு தொண்டாற்றி வாழ்ந்து வந்த செல்லையா என்பானைப் பெற்றார். மூத்த சகோதரிகளாக செல்லம்மா, செல்லாச்சி, பாக்கியம், அன்னப்பிள்ளை, தங்கப் பொண்ணு என்போரைப் பெற்றிருந்தார். செல்லாச்சி என்னும் நங்கை நல்லாள் இவ்வூரில் பேரோடும் புகழோடும் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்திருந்த கலிமா பொன்னையா என்று அன்பாக அழைத்திடும் அன்னவனைக் கரம்பிடித்து திருநெல் வேலி கிழக்கு இராமலிங்கம் வீதியிலே தனது இல்லறத்தை நல்லறமாக பசித்தோர் முகம் பார்த்து பசியாற்றி வாழ்ந்து வந்தார்.இவ்வேளையில் தனது தம்பியாம் கதிரவேலுவை தன்பிள்ளை போல் வளர்த்து கல்வி புகட்டிவிவசாயத்தில் விற்பன்னர் ஆக்கி வாழ வைத்தார்.

மணப்பருவமடைந்த தன் தம்பிக்கு பெற்றார் சகோதர்கள் என்போரின் விருப்போடு அதே ஊரில் வாழ்ந்து வந்த பசுபதி சிவக்கொழுந்து (ஆச்சிமுத்து) என்போர் பெற்றெடுத்த புவனம் என அன்பாக அழக்கப்படும் புவனேஸ்வரியை இல்லறத்தரசியாக்கினார்.அவர்கள் இருவரும் இல்லறமாம் நல்லறத்தில் இன்பமாக வாழ்ந்த வருகையிலே பத்மாவதி, ஞானேஸ்வரி(ஜேர்மனி), உதயகுமார் (கனடா), இராஜேஸ்வரி (ஜேர்மனி), கோமாவதி (ஜேர்மனி) என்பவர்களைப் பிள்ளைகளாகப் பெற்றெடுத்து கல்வி புகட்டி சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலப் பகுதியில் தனது உறவினர்கள் மனைவியின் உறவினர்கள் சொந்த பந்தங்கள் அயலவர்கள் என்று சொல்லி எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகி வாழ்ந்து வந்தமையினால் அக்குடும்பங்களைக்கூட தன் குடும்பம் என எண்ணி அக்குடும்பத்தில் உள்ளவர்களுக்கு திருமணங்ளை ஒப்பேற்றி அவர்களது சந்தோசமான வாழ்வில் தானும் இன்பம் கண்டார். விவசாயத்தை தன் வாழ்வாதார தொழிலாகக் கொண்டிருந்தாலும் பின்னாளில் தான் வாழ்ந்த சூழலில் வெதுப்பக (Bakery) உரிமையாளராக இருந்து பலருக்கு தொழில் வழங்கியது மாத்திரம் இல்லாமல் அதன் வாயிலாக பலரது பசிப்பிணியினையும் போக்கியுள்ளார்.

மூத்த மகள் பத்மாவதிக்கு நடராசா பூரணம் என்போரின் மகனாம் அருட் செல்வத்தினை மணாளனாக வரித்துக் கொண்டார். அவர்கள் வழிப்பேரர்களாக மிருணாளினி, ஜெயந்தினி, ஜெயாளினி, பிரியாளினி என்பவர்களைப் பெற்று மகிழ்ந் தார். இரண்டாவது மகளாம் ஞானேஸ்வரிக்கு தன் உடன்பிறந்த சகோதரியாம் அன்னப்பிள்ளையும் தர்மலிங்கமும் பெற்றெடுத்த அருந்தவப்புதல்வன் சொந்த மருமகன் தர்மரடணத்தை மணம் முடித்து வைத்தார். அவர்கள் வழிப்பேரர்களாக காயத்திரி மணிபாரதி என்பவர்களை இப்பூவுலகில் பெற்று இன்புற்றிருந்தார்.

ஆசைக்கு ஒரு ஆண்பிள்ளை எனப் பெற்று வளர்த்து வந்த உதயகுமாருக்கு தனது மனைவியின் தம்பியாம் செல்வராசாவும் பார்வதியம்மாவும் பெற்றெடுத்த மூத்த புதல்வி குமுதினியை மணம் முடித்து வைத்து அவர்கள் வழிப்பேரார்களாக சகாணாவையும் சரனையும் பெற்று அரவனைத்து வாழ்ந்து வந்தார். அடுத்த மகளாம் இராஜேஸ்வரிக்கு திருகோணமலையை பிறப்பிடமாகக் கொண்ட ராஜதுரை நாகம்மா தம்பதியனர் பெற்றெடுத்த எல்லோராலும் அன்பாக மாஸ்ரர் என அழைக்கப்படும் பண்பாளனை வரனாக வரித்தெடுத்து அவர்களும் ஜேர்மனியில் இன்பமாக வாழ்ந்து வருகின்றனர். கடைக்குட்டி செல்ல மகளாம் சோமாவதிக்கு இவ்வூர் பரஞ்சோதியும் புவனேஸ்வரியும் பெற்றெடுத்த குகரூபனை கணவனாகத் தேர்ந்தெடுத்து அவர்களை வழிப்போக்கர்களாக கபிஷானி,சஜானி என்பவர்களைப் பெற்று மகிழ்ந்தார்.

மூன்று பெண்பிள்ளைகளும் ஆசைமகனும் இத்தாலி ஜேர்மனி போன்ற நாடுகளில் தமது குடும்பத்தவர்களோடு வாழ்ந்து வரும் நாளில் மக்களின் இன்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வை நேரில் காண விரும்பி அந்நாடுகளுக்கு சென்று மக்களோடும் பேரப்பிள்ளைகளோடும் சேர்ந்து மகிழ்ச்சிகரமாக வாழ்ந்தார். அவ்வேளையின் தன் பேரர்களின் வாழ்வு சிறக்கவென மிருணாளினிக்கு சிவகுமாரைத் திருமணம் முடித்து வைத்து அவர்கள் வழிப்பூட்டர்களாக லக்ஷிகா,குமரன், வர்சிகா பெற்று மகிழ்ந்திருக்கும் போது ஜெயந்தினிக்கு கேஷவனை வரன் முடித்து வைத்து அவர்வழிப்பூட்டர்களாக கம்சவர்த்தினி, யுரேனியன், கவினுஜன் என்போரைப் பெற்றார். பிரியாளினிக்கு தன் அயலவனாம் விஜிதனை மணம் பேசி முடித்து அவர் வழிப்பூட்டர்களாக கர்சா, பிரதிஷா, பிரணிஷா,ஆகியோரைப் பெற்று வாழ்ந்து வரும் நாள் தன்னில் மூத்த பூட்டியாம் லக்ஷிகாவின் பூப்புனித நீராட்டுவிழாவில் பால் அறுகு தப்பி இன்புற்றிருக்கையில் இவ்வுலகில் வாழ்வு போதும் என்று பிள்ளைகள் புலம்பியழ பேரர்கள் கதறியழ பூட்டர்கள் விம்மியழ உற்றார் விழி நீர் சொரிய மண்ணழ மரமழ முற்றத்து அறுக அழ வெள்ளைப்பிள்ளையார் தாள் சேர்ந்தார்.

## தேற்றம்

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ மானிலத்திர்
வேண்டாம் நமக்கு அது வழியே – நாம்
போமளவு எமக்கென்னென்றுண்டிரும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகளின் ஆதங்கம்

அம்மப்பா, அப்பப்பா நீங்கள் பேரப்பிள்ளைகளாகிய எங்களின் இன்பகரமான வாழ்வை நேரில் கண்டு கழித்து எங்களோடு வாழ்ந் திருந்த வேளையில் எங்களை பாடசாலைக்கு அழைத்து செல்வீர்கள். எங்கள் புத்தகப்பைகளை நீங்கள் சுமப்பீர்கள் எங்களை பூங்காவிற்கு அழைத்துச் சென்று ஆசையாக ஊஞ்சலில் வைத்து ஆட்டுவீர்கள். எங்களோடு எங்களாக எங்களுக்கு சைக்கிள் ஓட்டப் பழக்கின்னீர்கள். அன்னிய நாட்டில் எமது பிறந்தநாள் விழாக்கள் பூப்புனித விழாக்கள் என்பவற்றில் எம்முடன் பங்கு பற்றி மகிழ்ந்தீர்கள். இவையெல்லாம் இன்று எங்கள் மனக்கண் முன்னே நிழலாடுகின்றது. அப்பப்பா உங்கள் பிரிவையே எங்களால் நம்பமுடியவில்லை. உங்களின் இறுதிச் சடங்குகளின் போது கூட எங்களால் கலந்து கொள்ள முடியவில்லை. ஆனால் நீங்கள் உங்கள் தாய் நாட்டிற்கு திரும்பி வந்து வாழ்ந்த வேளையில் நாங்கள் உங்களிடம் வந்து உங்களை ஆலயங்களுக்கு அழைத்துச் சென்ற பசுமையான நினைவுகள் எல்லாம் எமது உள்ளத்தில் இன்றும் நிறைந்திருக்கின்றது.உங்களைப் போல் ஒரு ஆசைப்பேரனை நாம் இனி எப்பிறப் பில் காண்போம் என எண்ணி விழி நீர் சொரிந்து நிற்பதோடு உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நேசமுடன்*

*பேரப்பிள்ளைகள்*

## அறிஞர்களின் பொன்மொழிகள்

**இந்த உலகில் எப்படியும் வாழ்ந்தேயாக வேண்டும் என்ற அளவுக்கு இங்கே இன்பங்கள் கலந்துள்ளன. இதைப் போலவே, உடனடியாய் மடிந்தேயாக வேண்டும் என்னும் அளவுக்குத் துன்பங்களும் நிறைந்துள்ளன.**

**– ஓர் அறிஞர்**

**பலரைச் சில காலமும், சிலரைப் பல காலமும் ஏமாற்றலாம்**
**ஆனால் எல்லோரையும் எப்போதும் ஏமாற்ற முடியாது**

**– ஆபிரகாம் லிங்கன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
முருகன்துணை

# கந்த சஷ்டி கவசம்



### காப்பு
### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமல ரருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

### நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செய்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை

கீதம் பாட கிண்கிணி யாட
மைய னடஞ்செய்யும் மயில் வாகனனார்
கையில்வே ல்எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலங்குகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ சணமும் பதக்கமுந் தரித்து
நண்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடையழகும் இணைமுழந்தாளும்
திருவடி ய□னில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல்முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருடன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத்தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலஸ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக்கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனை வரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளங்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டிய பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொங்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலொரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டதுவோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமார
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப்பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக் குறமகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவநீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சமென் றடியார் தழைத்திடவருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்க தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவார்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறித்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துணை வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயிலநட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணம் சண்முகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குந் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும்வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலுந்
தேக்குந் செந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப்பி தந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே

சொற்கும் பொருட்கு முயிராமெஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்ப்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்ப்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

கோளறு திருப்பதிகம் பண் – பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணைதடவி
மாசறுதிங்கள் ககங்கை முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனுள்
ஞாயிறுதிங்கள் செவ்வாய்புதன் வியாழன்வெள்ளி
சனிபாம்மிரண்டு முடனே
ஆசறுநல்ல நல்ல வவை நல்லநல்ல
அடியார வர்க்குமிகவே

என்பொடுகொம் பொடாமையினை மார்பிலங்க
வெருதேறி வேழையுடனே
பொன்பொதி மத்தமாலைபுனல் சூடிவந்தெ
நுளமே புகுந்தவதனால்
ஒன்பதொ டொன்றெடேழு பதினெட்டொடாறு
முடனாயநாள் களவைதாம்
அன்பொடு நல்லநல்லவவை நல்ல
வடியார வர்க்குமிகவே

உருவளர் பவளமேனியொளி நீறனிந்து
உமையோடும் வெள்ளைவிடைமேன்
முருகலர்கொன்றை திங்கள்முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்த வதனால்
திருமகள்கலையதூர் திசயமாதுபூமி
திசைதெய்வமான பலவும்
அருநெறிநல்ல நல்லவவைநல்லநல்ல
அடியார வர்க்குமிகவே

மதிநுதன்மங்கையோடு வடபாலிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேலணிந்தெ
னுளமே புகுந்தவதனாற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொதியுறு காலனங்கி நமனேடுதூதர்
கொடு நோய்களானபலவும்
அதிகுண நல்லநல்லவவை நல்லநல்ல
வடியார வர்க்குமிகவே.

நஞ்சனி கண்டனெந்தை மடவாள் தனோடு
விடையேறு நங்கள்பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேலனிந்தெ
னுளமேபு குந்ததனால்
வெஞ்சினவவுணரோடு முருமிடியுமின்ன
மிகையான பூதமவையும்
அஞ்சிடு நல்லநல்லயவை நல்லநல்ல
வடியார வர்க்குமிகவே

வாள்வரிய தளதாடைவரிகோவணத்தர்
மடவாடனோடு முடனாள்
நாண்மலர்வன்னி கொன்றைதிசூடிவந்தே
னுளமே புகுந்தவதனால்
கோளரியுழுவையோடு கொழையானைகேழல்
கொடு நாகமோடுகரடி
ஆளரிநல்ல நல்லவவைநல்லநல்ல
வடியார வர்க்குமிகவே

செப்பிளமுலை நன்மங்கையொரு பாகமாக
விடையேறு செல்வனடைவார்
ஒப்பிளமதியுமப்பு முடிமேலனிந்தெ
னுளமே புகுந்தவதனால்
வெப்பொடுகுளிரும் வாதமிகையான பித்தும்
வினையான வந்துநலியா
அப்படி நல்லவவை நல்லநல்ல
வடியாரவர்க்கு மிகவே

வேள்பட விழிசெய்தன் றுவிடைமேலிருந்து
மடவாடனோடு முடனாய்
வான்மதிவன்னி கொன்றைமலர்சூடிவந்தெ
னுளமேபுகுந்த வதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழ்கடல்சூலிலங்கை யரையன்றனோடு
மிடரான வந்துநலியா
ஆழ்கடனல்ல நல்லவவை நல்லநல்ல
வடியாரவர்க்கு மிகவே

பலபலவேடமாகும் பரனாரிபாகன்
பசுவேறு மெங்கள்பரமன்
சலமகளோடு டெருக்குமுடி
மேலனிந்தெ னுளமே புகுந்ததனுள்
மலர்மிசையோனு மாலுமறையோடு தேவர்
வருகாலமான பலவும்
அலைகடன் மேருநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்கு மிகவே

கொத்தலர் குலலியோடுவி சயற்குநல்கு
குணமாயவேட விகிர்தன்
மத்தமுமதியு நாகமுடிமேலணிந்தே
னுளமே புகுந்தவதனாற்
புத்தரோட மணைவாதி லழிவிக்குமண்ண
திருநீறுசெம்மை திடமே
அத்தகுநல்ல நல்லவவை நல்லநல்ல
வடியாரவர்க்கு மிகவே

தேனமவர்பொழில் கொளாலைவிளை செந்நெறுன்னி
வளர்செம்பொ னெங்குநிகழ
நான்முகனாதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞானமுனிவன்
தானுறுகோளு நாளுமடி யாரைவந்து
நலியாத வண்ணமுரைசெய்
ஆனசொன்மாலையோது மடியார்கள்வானில்
அரசாள்வாராணை நமதே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகநிதி
(உரையுடன்)

*உலக நீதி புராணத்தை யுரைக்கவே*
*கலைக ளாய்வருங் கரிமுகன் காப்பு.*

பதவுரை. உலக நீதி புராணத்தை – உலக நீதியாகிய பழஞ்செய்திகளை, உரைக்க –யான் கூறுவதற்கு, கலைகள் ஆய்வு அரும் – வேதம் முதலிய நூல்களால் ஆராய்ந்து காண்பதற்கு அரிய, கரிமுகன் காப்பு – யானை முகத்தையுடைய விநாயகக் கடவுள் காப்பாவார் என்றவாறு.

## சூத்திரம்

**ஓதாம லொருநாளும் இருக்க வேண்டாம்**
**ஒருவரையும் பொல்லாங்குச் சொல்ல வேண்டாம்**
**மாதாவை யொருநாளும் மறக்க வேண்டாம்**
**வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்**
**போகாத இடந்தனிலே போக வேண்டாம்**
**போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்**
**வாகாரும் குறவருடைய வள்ளி பங்கள்**
**மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.**

ப–ரை. ஓதாமல் ஒருநாளும் – (நூல்களைப்) படிக்காமல் ஒருநாளாவ, இருக்க வேண்டாம் – (நீ) சும்மா இருக்கக் கூடாது; ஒருவரையும் பொல்லாங்கு – எவரையும் தீய சொற்களால், சொல்ல வேண்டாம் – நிந்திக்காதே; மாதாவை ஒரு நாளும் – (பெற்ற) தாயை ஒருபொழுதும், மறக்க வேண்டாம் – மறவாதே வஞ் சனைகள் செய்வாரோடு – கபடச் செயல்களைச் செய்யுங் கீழவர்களுடன், இணங்க வேண்டாம் – சேராதே; போகாத இடந்தனிலே – தகாத இடத்திலே, போக வேண்டாம் – போகாமல் இரு; போகவிட்டு பறம் சொல்லி – (ஒருவர்) உன்னிடம் வந்து போன பின்னர் அவரைப் பற்றி இழிவாகக் கூறி, திரிய வேண்டாம் – அலை யாதே வாகு ஆரும் – தோள்வலி நிறைந்த, குறவருடை – குறவருடைய (மகளாகிய), வள்ளி பங்கன் – வள்ளிநாயச்சி யாரைப் பக்கத்தில் உடையவனாகிய, மயில் ஏறும் பெருமாளை – மயிலின் மீது ஏறி நடத்தும் முருகக்கடவுளை, நெஞ்சே வாழ்த்தாய் – மனமே வாழ்த்துவாயாக. எ–று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெங்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்
நஞ்சுடனே யொருநாளும் பழக வேண்டாம்
நல்லிணக்கம் இல்லாரோ டிணங்க வேண்டாம்
அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்
அடுத்தரை யொருநாளுங் கெடுக்க வேண்டாம்
மஞ்சாருங் குறவருடைய வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழத்தாய் நெஞ்சே.

ப–ரை. நெஞ்சு ஆர பொய்தன்னை – மனப்பூர்வமாக பொய்யை, சொல்ல வேண்டாம் – சொல்லாதே; நிலை இல்லா காரியத்தை – உறுதியில்லாத காரியத்தை, நிறுத்த வேண்டாம் – ஸ்தாபிக்க வேண்டாம்; நஞ்சுடனே ஒருநாளும் – விடத்தையுடைய பாம்பு போன்றவர்களுடனே ஒரு பொழுதும், பழக வேண்டாம் – சேர்ந்து பழகாதே நல் இணக்கம் இல்லாரோடு – நல்ல நடத்தை நட்பு இல்லாதவர்களுடன், இணங்க வேண்டாம் – நட்புக் கொள்ளாதே; அஞ்சாமல் – பயமில்லாமல், தனி வழி போகவேண்டாம் – தனிமையாக வழிச் செல்லாதே அடுத்தவரை ஒருநாளும் – உன்னிடத்து வந்து சேர்ந்தவரை ஒருபொழுதும், கெடுக்க வேண்டாம் – கெடுக்காதே மஞ்சு ஆரும் குருவருடை – வலிமை நிறைந்த குறவருடைய (மகளாகிய), வள்ளி பங்கன் – வள்ளி நாய்ச்சியாரைப் பக்கத்தில் உடையனாகிய, மயில் ஏறும் பெருமாளை – மயிலின்மீது ஏறி நடத்தும் முருகக் கடவுளை, நெஞ்சே வாழ்ந்தாய் – மனமே (நீ) வாழ்த்துவாயாக. எ–று.

மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்
மாற்றானை யுறவென்று நம்ப வேண்டாந்
தனந்தேடி யுண்ணாமற் புதைக்க வேண்டாம்
தருமத்தை யொருநாளும் மறக்க வேண்டாம்
சினந்தேடி யல்லலையுந் தேட வேண்டாம்
சினத்திருந்தார் வாசல்வழிச் சேரல் வேண்டாம்
வனந்தேடுங் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

ப–ரை. மனம் போன போக்கு எல்லாம் – உள்ளம் சென்றபடியெல்லாம், போக வேண்டாம் – செல்லாதே; மாற்றானை உறவு என்ற – பகைவனை உறவினன் என்று, நம்ப வேண்டாம் – நம்பாதே; தனம் தேடி உண்ணாமல் – பொருளைச் (வருந்திச்) சம்பாதித்தச் செலவிடாமல், புதைக்க வேண்டாம் – மண்ணிற் புதைக்காதே; தருமத்தை ஒருநாளும் – அறஞ் செய்தலை ஒரு பொழுதும், மறக்க வேண்டாம் –


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்காதே சினம் தேடி - கோபத்தை அடைந்து, அல்லலையும் - (அதனால்) விளையும் துன்பத்தினையும், தேட வேண்டாம் - தேடாதே; சினந்து இருந்தார் வாசல் வழி - கோபித்திருந்தாருடைய வீட்டு வழியாக, சேரவேண்டாம் - செல்லாதே; வனம் தேடும் குறவருடை - காட்டின்கண் (விலங்கு முதலியன) தேடித் திரியும் குறவருடைய (மகளாகிய), வள்ளிபங்கன் - வள்ளி நாய்ச்சியாரை பக்கத்தில் உடையவனாகிய, மயில் ஏறும் பெருமாளை - மயிலின்மீது ஏறி நடத்தும் முருகக் கடவுளை, நெஞ்சே வாழ்த்தாய் - மனமே வாழ்த்துவாயாக. எ-று.

**குற்றமொன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்**
**கொலைகளவு செய்வாரோ டிணங்க வேண்டாம்**
**கற்றவரை யொருநாளும் பழிக்க வேண்டாம்**
**கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்**
**கொற்றவனோ டெதிர்மாறு பேச வேண்டாம்**
**கோயிலில்லா ஊரிற்குடி யிருக்க வேண்டாம்**
**மற்றுநிக ரில்லாத வள்ளி பங்கன்**
**மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.**

ப - ரை. குற்றம் ஒன்றும் பாராட்டி - (ஒருவர் செய்த) தவறை மட்டும் எடுத்துச் சொல்லி, திரிய வேண்டாம் - அலையாதே; கொலைகளவு செய்வாரோடு - கொலையும் திருட்டும் செய்கின்ற தீயோருடன், இணங்க வேண்டாம் - சேராதே; கற்றவரை ஒருநாளும் - (கல்விப்) பண்டிதர்களை ஒருபொழுதும், பழிக்க வேண்டாம் - பழிக்காதே; கற்பு உடைய மங்கையரை - கற்புடைய பெண்களை, கருத வேண்டாம் - இச்சிக்க வேண்டாம்; எதிர் கொற்றவனோடு - எதிரே நின்று அரசனோடு, மாறு பேச வேண்டாம் - எதிர்ப்பான சொற்களைப் பேசாதே; கோயில் இல்லா ஊரில் - கோவில் இல்லாத ஊர்களில், குடி இருக்க வேண்டாம் - குடியிருக்காதே; மற்றுநிகர் இல்லாத - பிறிதொன்று ஒப்புச் சொல்ல முடியாத, வள்ளிபங்கன் - வள்ளி நாய்ச்சியாரை பக்கத்தில் உடையவனாகிய, மயில் ஏறும் பெருமாளை - மயிலின்மீது ஏறி நடத்தும் முருகக் கடவுளை, நெஞ்சே வாழ்த்தாய் - மனமே வாழ்த்துவாயாக. எ-று.

**வாழாமற் பெண்ணைவைத்துத் திரிய வேண்டாம்**
**மனையாளைக் குற்றமொன்றுஞ் சொல்ல வேண்டாம்**
**வீழாத படுகுழியில் வீழ வேண்டாம்**
**வெஞ்சமரிற் புறங்கொடுத்து மீள வேண்டாம்**
**தாழ்வான குலத்துடனே சேர வேண்டாம்**
**தாழ்ந்தவரைப் பொல்லாங்குச் சொல்ல வேண்டாம்**
**வாழ்வாருங் குறவருடை வள்ளி பங்கன்**
**மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப-ரை. பெண்ணை வைத்து - மனையாளை (வீட்டில் துன்பமுற) வைத்து, வாழாமல் - (அவளோடு கூடி) வாழாமல், திரிய வேண்டாம் - அலையாதே; மனையாளை குற்றம் ஒன்றும் - மனைவியின்மேல் குற்றமானசொல் யாதொன்றும், சொல்ல வேண்டாம் - சொல்லாதே; வீழாத படுகுழியில் - (மறுபடியும்) எழுந்திருக்க முடியாத பெரும் பள்ளத்தில், வீழவேண்டாம் - வீழ்ந்துவிடாதே வெஞ்சமரில் புறங் கொடுத்து - கொடிய போரில் எதிர்நின்று சண்டை செய்யாமல், மீளவேண்டாம் - திரும்பி வாராதே தாழவான குலத்துடன் - தாழ்ந்த இழிவான செயல்கள் புரிபவரோடு, சேர வேண்டாம் - கூடாதே தாழ்ந்தவரை பொல்லாங்கு - ஏழைமீது தீங்கு, சொல்ல வேண்டாம் - சொல்லாதே; வாழ்வு ஆரும் குறவருடை - செல்வம் நிறைந்த குறவருடைய (மகளாகிய), வள்ளி பங்கன் - வள்ளி நாய்ச்சியாரை பக்கத்தில் உடையவனாகிய, மயில் ஏறும் பெருமாளை - மயிலின் மீது ஏறி நடத்தும் முருகக் கடவுளை. நெஞ்சே வாழ்த்தாய் - மனமே வாழ்த்துவாயாக. எ-று.

**வார்த்தை சொல்வார் வாய்பார்த்துத் திரியவேண்டாம்**
**மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்**
**மூத்தோர்சொல் வார்த்தைதனை மறக்க வேண்டாம்**
**முன்கோபக் காரரோ டிணங்க வேண்டாம்**
**வாத்தியார் கூலியைவைத் திருக்க வேண்டாம்**
**வழிபறித்துத் திரிவாரோ டிணங்க வேண்டாம்**
**சேர்த்தபுக ழாளனொரு வள்ளி பங்கன்**
**திருக்கைவே லாயுதனைச் செப்பாய் நெஞ்சே.**

ப-ரை. வார்த்தை சொல்வார் வாய் பார்த்து - வாயாடிகளின் வாயைப் பார்த்துக் கொண்டு, திரியவேண்டாம் - அவரோடுகூட அலையாதே மதியாதார் தலைவாசல் - உன்னை மதிக்காதவருடைய கடை வாயிலில், மிதிக்க வேண்டாம் - அடியெடுத்து வைக்காதே; மூத்தோர் சொல் - பெரியோர் கூறுகின்ற, வார்த்தைதனை - சொற்களை, மறக்க வேண்டாம் - மறவாதே; முன்கோபக் காரரோடு - முன்கோபமுடையாருடனே, இணங்க வேண்டாம் - சேராதே வாத்தியார் கூலியை - உபாத்தியாரின் சம்பளத்தை, வைத்திருக்க வேண்டாம் - (கொடுக் காமல்) வைத்துக் கொள்ளாதே; வழி பறித்து திரிவாரோடு - வழிமடக்கித் திரிந்து பொருள் தேடுவாரோடு, இணங்க வேண்டாம் - சேராதே சேர்த்த புகழாளன் ஒரு - ஈட்டிய புகழுடையவனாகிய ஒப்பற்ற, வள்ளி பங்கன் - வள்ளியம்மையாரைப் பக்கத்தில் உடையவனாகிய, திரு கை வேலாயுதனை - அழகிய கையின்கண் வேற்படையையுடைய முருகக் கடவுளை, நெஞ்சே செப்பாய் - மனமே புகழ்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதாமற் கருமங்கள் முடிக்க வேண்டாம்
கணக்கழிவை யொருநாளும் பேச வேண்டாம்
பொருவார்தம் போர்க்களத்திற் போக வேண்டாம்
பொதுநிலத்தி லொருநாளும் இருக்க வேண்டாம்
இருதார மொருநாளுந் தேட வேண்டாம்
எளியாரை எதிரிட்டுக் கொள்ள வேண்டாம்
குருகாரும் புனங்காக்கும் ஏழை பங்கன்
குமரவேள் பாதத்தைக் கூறாய் நெஞ்சே.

ப—ரை. கருமங்கள் கருதாமல் – (செய்யத்தக்க) காரியங்களை (செய்யும் உபாயத்தை) யோசியாமல், முடிக்க வேண்டாம் – முடிக்க முயலாதே; அழிவு கணக்கை ஒருநாளும் – பொய்க்கணக்கை ஒருபொழுதும், பேசவேண்டாம் – பேசாதே; பொருவார் – போர்செய்வாருடைய, போர்க்களத்தில் – போர் (நடக்கும்) இடத்தின்கண், போகவேண்டாம் – போகாதே; பொது நிலத்தில் ஒருநாளும் – பொதுவாகிய இடத்தில் ஒருபொழுதும், இருக்க வேண்டாம் – (குடி) இராதே; இருதாரம் ஒருநாளும் – இரு மனைவியரை ஒரு பொழுதும், தேட வேண்டாம் – தேடிக்கொள்ளாதே; எளியாரை – ஏழைகளை, எதிரிட்டுக் கொள்ள வேண்டாம் – பகைத்துக் கொள்ளாதே; குருகு ஆரும் – பறவைகள் நிறைந்த, புனம் காக்கும் – தினைப்புனத்தைக் காத்த, ஏழை பங்கன் – வள்ளி நாய்ச்சியாரை பக்கத்தில் உடையவனாகிய, குமரவேள் பாதத்தை – குமரவேளின் திருவடியை, நெஞ்சே கூறாய் – மனமே புகழ்வாய். எ—று.

சேராத இடந்தனிலே சேர வேண்டாம்
செய்தநன்றி யொருநாளும் மறக்க வேண்டாம்
ஊரோடுங் குண்டுணியாய்த் திரிய வேண்டாம்
உற்றாரை உதாசினங்கள் சொல்ல வேண்டாம்
பேரான காரியத்தைத் தவிர்க்க வேண்டாம்
பிணைபட்டுத் துணைபோகித் திரிய வேண்டாம்
வாராருங் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

ப—ரை. சேராத இடந்தனில் – சேரக்கூடாத இடங்களில், சேரவேண்டாம் – போகவேண்டாம்; செய்த நன்றி ஒருநாளும் – ஒருவர் செய்த உதவியை ஒருபொழுதும், மறக்க வேண்டாம் – மறக்காதே; ஊரோடும் குண்டுணியாய் – ஊர்முழுதும் கோட் சொல்பவனாக, திரிய வேண்டாம் – அலையாதே; உற்றாரை – உறவினரை, உதாசினங்கள் சொல்ல வேண்டாம் – இகழ்ச்சியாகக் கூற வேண்டாம்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர் ஆன - புகழ் அடைதற்குக் காரணமாகிய, காரியத்தை - காரியத்தை, தவிர்க்க வேண்டாம் - (செய்யாது) விடவேண்டாம்; பிணைபட்டு துணைபோகி - (ஒருவனுக்கு) உடன்பட்டு துணையாகச் சென்று, திரியவேண்டாம் - அவன் செல்லும் கெட்ட வழிக்கெல்லாம் போய் அலையாதே; வார் ஆர் குறவர் உடை - பெருமை நிறைந்த கறவருடைய (மகளாகிய), வள்ளிபங்கன் - வளளிநாய்ச்சியாரை பக்கத்தில் உடையவனாகிய, மயில் ஏறும் பெருமாளை - மயிலின்மீது ஏறி நடத்தும் முருகக் கடவுளை, நெஞ்சே வாழ்த்தாய் - மனமே வாழ்த்துவாயாக. எ-று.

மண்ணினின்று மண்ணோரஞ் சொல்ல வேண்டாம்
மனஞ்சலித்துச் சிலுகிட்டுத் திரிய வேண்டாம்
கண்ணழிவு செய்துதுயர் காட்ட வேண்டாம்
காணாத வார்த்தையைக்கட் டுரைக்க வேண்டாம்
புண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டாம்
புறஞ்சொல்லித் திரிவாரோ டிணங்க வேண்டாம்
மண்ணளந்தான் தங்கையுமை மைந்தன் எங்கோன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

ப-ரை. மண்ணில் நின்று - நிலத்தில் நின்று, மண் ஓரம் - மண்ணைப்பற்றி ஒருதலைச் சார்பாக, சொல்லவேண்டாம் - பேசாதே; மனம் சலித்து - உள்ளம் சலிப்பினால், சிலுகிட்டு - (யார்மாட்டும்) சண்டையிட்டு, திரியவேண்டாம் - அலையாதே; கண் அழிவு செய்து - அருளை அழித்து, துயர் காட்ட வேண்டாம் - (பிற உயிர்கட்குத்) துன்பஞ் செய்யாதே; கானாத கட்டுவார்த்தையை - காணாதவற்றைப் பற்றி கட்டுவார்த்தைகளை, உரைக்க வேண்டாம் - சொல்லாதே; புண்பட வார்த்தைதனை - (கேட்போர் மனம்) புண்படுமாறு சொற்களை, சொல்ல ண்டாம் - சொல்லாதே; புறம் செல்லி திரிவாரோடு - புறங்கூறி அலைபவருடன், இணங்கவேண்டாம் - சேராதே; மண் அளந்தான் - நிலத்தை (மூவடியால்) அளந்த திருமாலுக்கு, தங்கை உமை - தங்கையாகிய உமாதேவிக்கு, மைந்தன் எம் கோன் - மகனும் எமக்குத் தலைவனும் ஆகிய, மயில் ஏறும் பெருமாளை - மயிலின்மீது ஏறி நடத்தும் முருகக் கடவுளை, நெஞ்சே வாழ்த்தாய் - மனமே வாழ்த்துவாயாக. எ-று.

மறம்பேசித் திரிவாரோ டிணங்க வேண்டாம்
வாதாடி வழக்கழிவு சொல் வேண்டாம்
திறம்பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டாம்
தெய்வத்தை யொருநாளும் மறக்க வேண்டாம்
இறந்தாலும் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
ஏசலிட்ட உற்றாரை நத்த வேண்டாம்
குறம்பேசி வாழ்கின்ற வள்ளி பங்கன்
குமரவேள் நாமத்தைக் கூறாய் நெஞ்சே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப – ரை. மறம்பேசி திரிவாரோடு – வீரமொழி கூறி (போருக்கு) அலைபவருடன், இணங்கவேண்டாம் – சேராதே; வாதாடி அழிவு வழக்கு – வாது கூறி கெடு வழக்கு, சொல்ல வேண்டாம் – கூறாதே; திறம்பேசி கலகம் இட்டு – வலிமை கூறி கலகம் செய்து, திரியவேண்டாம் – அலையாதே; தெய்வத்தை ஒருநாளும் – இறைவனை ஒருபொழுதும், மறக்க வேண்டாம் – மறக்காதே; ,றந்தாலும் பொய்தன்னை – (கூறாதிருப்பின்) இறக்க நேரிட்டாலும் பொய்யை, சொல்ல வேண்டாம் – சொல்லாத; ஏசல் இட்ட உற்றாரை – இகழ்ச்சி செய்த உறவினரை, நத்தவேண்டாம் – விரும்பாதே; குறம்பேசி வாழ்கின்ற – கறிசொல்லி வாழும், வ்ளி பங்கன் – வள்ளி நாய்ச்சியாரை பக்கத்தில் உடையவனாகிய, குமரவேள் நாமத்தை – முருகவேளின் பெயர்களை, நெஞ்சே கூறாய் – மனமே சொல்லித் துதிப்பாயாக. எ – று.

**அஞ்சுபேர் கூலியைக்கைக் கொள்ள வேண்டாம்**
**அதுவேதிங் கென்னின்நீ சொல்லக் கேளாய்**
**தஞ்சமுடன் வண்ணான் நாவிதன்றன் கூலி**
**சகலகலை யோதுவித்த வாத்தியார் கூலி**
**வஞ்சமற நஞ்சறுத்த மருத்துவிச்சி கூலி**
**மகாநோவு தனைத்தீர்த்த மருத்துவன்றன் கூலி**
**இன்சொலுடன் இவர்கூலி கொடாத பேரை**
**ஏதேது செய்வானோ ஏமன் றானே.**

ப – ரை. அஞ்சுபேர் கூலியை – ஐவருடைய கூலியை, கைக்கொள்ள வேண்டாம் – கைப்பற்ற வேண்டாம் (கொடுத்து விட வேண்டும்), அது ஏது என்னின் – அக்கூலி யாது என்று கேட்பின், சொல்ல நீ கேளாய் – நான் சொல்கிறேன் நீ கேட்பாயாக, வண்ணான்கூலி – வண்ணானுடைய கூலியும் நாவிதன் கூலி – அம்பட்டன் கூலியும், சகல கலை ஓதுவித்த பல கலைகளையும் படிப்பித்த, வாத்தியார் கூலி – ஆசிரியர் கூலியும், வஞ்சம் அற நஞ்சு அறுத்த – வஞ்சனை நீங்க நச்சுக் கொடி அறுத்த, மருத்துவிச்சி கூலி – மருத்துவிச்சியின் கூலியும், மகாநோவை தீர்த்த – (நீக்குதற்கு அரிய) கொடிய நோயினை நீக்கிய, மருத்துவன் கூலி – வைத்தியன் கூலியும், (ஆம்); இவர் கூலி – இவர்கட்குக் கொடுக்க வேண்டிய கூலியை, தஞ்சமுடன் இன்சொல்லுடன் – அன்புடனும் இன்சொல்லோடும், கொடாத பேரை – கொடுக்காதவர்களை, ஏமன் – இயமன், ஏது ஏது – என்ன என்ன துன்பம், செய்வானோ – செய்வானோ, (நான் அறியேன்.) எ – று.

**கூறாக்கி யொருகுடியைக் கெடுக்க வேண்டாம்**
**கொண்டைமேற் பூத்தேடி முடிக்க வேண்டாம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூறாக்கித் தலையிட்டுத் திரிய வேண்டாம்
துர்ச்சனராய்த் திரிவாரோ டிணங்க வேண்டாம்
வீறான தெய்வத்தை யிகழ வேண்டாம்
வெற்றியுள்ள பெரியோரை வெறுக்க வேண்டாம்
மாறான குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

ப-ரை. ஒரு குடியை கூறு ஆக்கி - ஒரு குடும்பத்தைப் பிரித்து, கெடுக்க வேண்டாம் - கெடுக்காதே; பூ தேடி - பூவைத் தேடி, கொண்டை மேல் - தலைமயிரில், முடிக்க வேண்டாம் -முடித்துக் கொள்ளாதே; தூறு ஆக்கி தலையிட்டு - அதே வேலையாக இருந்து, திரிய வேண்டாம் - திரியாதே் துர்ச்சனராய் திரிவாரோடு -தீயவர்களாகி (ஊர்தோறும்) அலைபவருடன், இணங்க வேண்டாம் - சேராதே; ஆன தெய்வத்தை - பெருமையுடையனவாகிய தெய்வங்களை, இகழ வேண்டாம் - இகழாதே; வெற்றி உள்ள பெரியோரை - மேன்மையுடைய பெரியோர்களை, வெறுக்க வேண்டாம்.

ஆதரித்துக் பலவகையாற் பொருளுந் தேடி
அருந்தமிழால் அறு முகனைப் பாடவேண்டி
ஓதுவித்த வாசகத்தால் உலக நாதன்
உண்மையாய் பாடிவைத்த உலகநீதி
காதலித்துக் கற்றோருங் கேட்ட பேருங்
கருத்துடனே நாடோறுங் களிப்பினோடு
போதமுற்று மிக வாழ்ந்து புகழுந் தேடிப்
பூலோக முள்ளளவும் வாழ்வர் தாமே.

உலக நாதன் என்னும் புலவன் பலநல் வழியாற் பொருள் சேர்த்து, பின்பு தமிழ்மொழியால் முருகக் கடவுளைப் பாட விரும்பி அப்பெருமான் உணர்த்திய வாசகங்களாற்பாடி வைத்த உலகநீதி என்னும் இந்நூலை மனவிருப்புடன் கற்றவரும் கேட்டவரும் நல்லெண்ணமும், மன மகிழ்ச்சியும் ஞானமும் வாழ்வும் புகழும் உடையவர்களாய் உலகமுள்ளவரையும் வாழ்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் பாடல்

### திருவிடைமருதூர்

மென்றுவிழுங்கி விடாய்க்கழிக்க நீர்தேடல்
என்றுவிடியும் எனக்கு எங்கோவே – நன்றி
கருதார் புரமூன்றும் கட்டழலால் செற்ற
மருதா உன்சந்நிதிக்கே வந்து!

### திருவொற்றியூர்

கண்டம் கரியதாம் கண்மூன்று உடையதாம்
அண்டத்தைப்போல அழகியதாம் – தொண்டர்
உடல் உருகத் தித்திக்கும் ஓங்குபுகழ் ஒற்றிக்
கடலருகே நிற்கும் கரும்பு

வாவிஎல்லாம் தீர்த்த மணல்எல்லாம் வெண்ணீறு
காவனங்கள் எல்லாம் கணநாதர் – பூவுலகில்
ஈது சிவலோகம் என்றென்றே மெய்த்தவத்தோர்
ஓதும் திருவொற்றியூர்!

### திருவாரூர்

ஆருரர் இங்கிருக்க அவ்வூர்த் திருநான்று
ஊரூர்கள் தோறும் உழலுவீர் – நேரே
உளக்குறிப்பை நாடா ஊமர்காள் நீவிர்
விளக்கிருக்கத் தீத்தேடு வீர்

எருவாய்க்கு இருவிரல்மேல் ஏறுண்டிருக்கும்
கருவாய்கோ கண்கலக்கப் பட்டாய்! – திருவாரூத்
தேரோடும் வீதியிலே செத்துக் கிடக்கின்றாய்
நீரோடும் தாரைக்கே நீ!

### திருஏகம்பம்

எத்தனைஊர், எத்தனைவீடு , எத்தனைதாய். பெற்றவர்கள்
எத்தனைபேர் இட்டழைக்க ஏன்என்றேன் – நித்தம்
எனக்குக் கலையாற்றாய் ஏகம்பா! கம்பா!
உனக்குத் திருவிளையாட் டோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கச்சிக்காரோணம்

அத்திமுதல் எறும்பீ றானவுயிர் அத்தனைக்கும்
சித்தம் மகிழ்ந்களிக்கும் தேசிகா! மெத்தப்
பசிக்குதையா பாவியேன் பாழ்வயிற்றைப் பற்றி
இசிக்குதையா! காரோண ரே

## திருக்காளத்தி

பொய்யை ஒழியாய்ப் புலாலைவிடாய் காளத்தி
ஐயரை எண்ணாய் அறம்செய்யாய் - வெய்ய
சினமே ஒழியாய் திருவெழுத்தைந்து ஓதாய்
மனமே உனக்கென்ன மாண்பு?

## திருஇரும்பையூர்

மாதா உடல் சித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவும் கைசலித்து விட்டானே - நாதா!
இருப்பையூர் வாழ்சிவனே இன்னம்ஓர் அன்னை
கருப்பையூர் வாராமற் கா!

## திருவையாறு

மண்ணும் தணல்ஆற் வானும் புகைஆற
கையாறவும் தாயும் இளைப்பாறப் - பண்ணுமயன்
கையாறவும் அடியேன்கால் ஆறவும் காண்பார்
ஐயா! திருவையா றா!

## திருக்குற்றாலம்

காலன் வருமுன்னே கண்பஞ்சடை முன்னே
பாலுண் கடைவாய்ப் படுமுன்னே - மேல்விழுந்தே
உற்றார் அழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூற.

வீற்றிருந்தாள் அன்னை வீதிதனில் இருந்தாள்!
நேற்றிருந்தாள் இன்றுவெண் நீறானாள் - பால்தெளிக்க
எல்லாரும் வாருங்கள் ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுப் பாடல்கள்

சிற்றம் பலமும் சிவனும் அருகிருக்க
வெற்றம்பலம் தேடி விட்டோமே - நித்தம்
பிறந்த இடத்தைத் தேடுதேபேதை மடநெஞ்சம்
கறந்த இடத்தை நாடுதே கண்

தோடவிழும் பூங்கோதைத் தோகைஉனை இப்போது
தேடினவர் போய்விட்டார் தேறியிரு - நாடிநீ
என்னை நினைத்தால் இடுப்பில் உதைப்பேன்நான்
உன்னை நினைத்தால் உதை

வாசல்படி கடந்துவாராத பிச்சைக்கு இங்கு
ஆசைப்படுவதில்லை அண்ணலே - ஆசைதனைப்
பட்டிறந்த காலமெல்லாம் போதும் பரம்மேட்டி
சுட்டிறந்த ஞானத்தைச் சொல்.

நச்சரவம் பூண்டானை நன்றாய்த் தொழுவதுவும்
இச்சையிலே தான்அங் கிருப்பதுவும் - பிச்சைதனை
வாங்குவதும் உண்பதும் வந்துதிரு வாயிலே
தூங்குவதும் தானே சுகம்.

இருக்கும் இடம்தேடி என்பசிக்கே அன்னம்
உருக்கமுடனே கொண்டுவந்தால் உண்பேன் - பெருக்க
அழைத்தாலும் போகேன் அரனே என்தேகம்
இளைத்தாலும் போகேன் இனி.

விட்டுவிடப் போகுதுயிர்! விட்டஉடனே உடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார் - பட்டதுபட்டு
எந்நேரமும் சிவனை ஏந்துனாள் போற்றுங்கள்
சொன்னேன் அதுவே சுகம்!

ஆவியொடு காயம் அழிந்தாலும் மேதினியில்
பாவி என்று நாமம்படையாதே - மேவியீசர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தாரமும் கடம்பும் வேண்டா மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி.

வெட்ட வெளியாய் வெளிக்குத் தெரியாது!
கட்டளையும் கைப்பணமும் காணாத - இட்டமுடன்
பற்றென்றால் பற்றாது பாவியே நெஞ்சில்அவன்
இற்றெனவே வைத்த இனிப்பு.

இப்பிறப்பை நம்பி இருப்பையோ நெஞ்சமே?
வைப்பிருக்க வாயில்மனை இருக்கச் - சொப்பனம்போல்
விக்கிப்பற்கிட்டக் கம்மெத்தப் பஞ்சிட்டு அப்பைக்
கக்கிச்செத் துக்கொட்டக் கண்டு.

மேலும் இருக்க விரும்பினையே வெள்விடையோன்
சீலம் அறிந்திலையே சிந்தையே! கால்கைக்குக்
கொட்டை இட்டு மெத்தைஇட்டுக் குத்திமெத்தப் பட்டஉடல்
கட்டை இட்டுச் சுட்டுவிடக் கண்டு.

ஒன்பவாய்த் தோல்பைக்கு ஒருநாளைப் போலவே
அன்புவைத்து நெஞ்சே அலைந்தாயே! - வன்கழுக்கள்
தத்தித்தத் திச்செட்டை தட்டிக்காட் டிப்பிட்டுக்
கத்திக் குத்தித்தின்னக் கண்டு.

இன்னம் பிறக்க இசைவயோ நெஞ்சமே?
மன்னர்இவர் என்றிருந்து வாழ்ந்தாரை - முன்னம்.
உற்றார் அழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத்தானையே கூறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிட மேம்பாட்டில் இறப்பின் முன்னும் பின்னும்

மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிவகுப்பது சமயம் இந்து சமய மரபிலே பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளப் பல்வேறு கிரியைகள் வகுக்கப் பட்டு பேணப்பட்டு வந்துள்ளன. இம்மைக்கும் மறுமைக்கும் பயன்தரும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

*"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்ற விடற்கு"*

என்ற வள்ளுவனின் வாக்கிற்கமைவாக தன்னையும் அறிந்து தான் எடுத்த பிறவியின் நோக்கத்தையும் அறிந்து இறைவனது தாளினைப் பற்றும் வழி வகைகளையும் அறிந்து வாழும் போதே மனிதன் முழுமையடைகின்றான்.

ஆன்மாக்கள் தம் நல்வினை தீவினைகளுக்கேற்ப எண்ணற்ற பிறப்பை உடையவர்களாகப் பிறந்து இறந்து இறைவனடி சேரும் வகையிலும் உழலும், இப்பிறவியின் போது எமக்கு எத்தனை துணைகள் வந்தாலும் இறைவனது துணைக்கு ஈடாகாது. ஆகவே நாம் வாழும் காலத்திலேயே இம்மைக்கும் மறுமைக்கும் உரிய உயிர்த் துணையைத் தேடிக் கொள்ள வேண்டும். இவ்விரு நிலைகளிலம் எமக்கு உயிர்த்துணையாக விளங்குபவன் இறைவன் ஒருவனே.

*"உற்றாருளரோ உயிர் கொண்டு போம் பொழுது*
*குற்றாலத்துறை கூத்தா உனை அல்லால் - நமக்கு*
*உற்றார் ஆருளறோ"*

என்ற அப்பர் சுவாமிகளின் வாக்கு நினைத்தற்குரியது. ஒருவனது சுயநன்மையின் பொருட்டு செய்யப்படும் கிரியை ஆன்மார்த்த கிரியை எனப்படும். இவை பூர்வக் கிரியை, அபரக் கிரியை என இருவகைப்படும்.

தாயின் கர்ப்பத்திலிருந்து இவ்வுலகில் நடமாடும் வரை செய்யப்படும் கிரியைகள் பூர்வக் கிரியைகள் ஆகும். உயிரானது எடுத்த உடலை விட்டு நீங்கியபின் உயிரின் நன்மை குறித்துச் செய்யப்படும் கிரியைகள் அபரக் கிரியைகள் எனப்படும்.

பூர்வக் கிரியைகளில் 40 சமஸ்காரங்கள் சொல்லப்படுகின்றன. கர்பாதானம், பும்ஸ்சவனம், சீமந்தம், ஜாத கர்மா, நாமகரணம், அன்னப்பிராசனம், சௌளம், உபநயனம், வித்தியாரம்பம், தீட்சை, சந்தியா, வந்தனம், சமாவர்த்தனம், விவாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றன குறிப்பிடத்தக்கன. இன்று எம்மிடையே 40 சமஸ்காரங்களும் இடம்பெறுவதில்லை. கால நேரம் கருதி கிரியைகள் சுருக்கப்பட்டுவிட்டன. என்றே கூற வேண்டும். எனினும் பிராமணச் சமூகத்தினர் மத்தியில் இவை சிறப்பாகக் கடைப்பிடிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

ஆன்மார்த்த கிரியைகள் ஒருவனது ஆத்மசாந்திக்கும் ஈடேற்றத்துக்கும் பெரிதும் துணை புரிகின்றன. அபரம் என்பது பிந்தியது எனப் பொருள்படும். உடலில் இருந்து உயிர் பிரிந்த பின்பு செய்யும் கிரியை ஆதலால் இது அபரக்கிரியை என்ற பெயர் பெறுகின்றது. அபரக் கிரியைகளைச் செய்வதனால் உடலை விட்டு நீங்கிய ஆன்மா பாவங்களினின்றும் நீங்கி முத்தி நிலை அடையும் என்பது நம்பிக்கை. தாய் தந்தைக்குச் செய்ய வேண்டிய கடமைகளை அவர்கள் உயிருடன் இருக்கும் போதும் இல்லாத போதும் பிள்ளைகள் தவறாது செய்தல் வேண்டும். பிதிர்க்கடன் செய்யாதோர் சமய ஆசாரம் தவறியோராவர். பிதிரர் வருந்தின் பெருந் தீமைகள் ஏற்படும். அது எமது சந்ததியைப் பாதிக்கும் என்பதை அனைவரும் நினைவிற் கொள்ள வேண்டும்.

அபரக் கிரியைகளில் உத்திராந்திக் கிரியை, பிரேதக் கிரியை, அஸ்தி சஞ்சயனம், அந்தியேட்டி, ஏகோதிட்டம், பஞ்சதமாசியம், சோபதகும்பகிராா்த்தம், சபிண்டீகரணம், மாசிகங்கள், வருடசிராா்த்தம், மகாளயம் போன்றன குறிப்பிடத் தக்கன.

*"மைந்தனைப் பெறுகின்ற மாசிலாப்*
*புந்தி அன்பொடு போற்றி வளர்ப்பது*
*தந்தை மாண்டுழி தம்முறைக்கேற்ப*
*வந்தமில் கடனாற்றுதற் கேயன்றோ*

என்ற கந்தபுராணச் செய்யுளில் மைந்தனின் சிறப்பும், அவரவர் முறைப்படி அதாவது பிராமணர், சத்திரியர், வைசிகர், சூத்திரர் என்ற வருகை அடிப்படையில் பதினொன்று, பதினாறு, இருபத்தொன்று, முப்பத்தொன்று என்ற அடிப்படையில் தத்தம் கடமை நிறைவுறச் செய்தல் அவசியம் என வலியுறுத் தப்படுவது மனங்கொள்ளத்தக்கது.

ஒருவனது நல்வினையின் பொருட்டே அவனுக்கு நன்மக்கள் வாய்க்கப் பெறுவர் என்பதை

*"எழுபிறப்பும் தீயவை தீண்டாபழி பிறங்காப்*
*பண்புடை மக்கட்பெறின்" என்றும்,*

*"தம்பொருள் என்பதம் மக்களவர் பொருள்*
*தத்தம் வினையான் வரும்"* என்றும் வள்ளுவர் கூறுவது நோக்கற்பாலது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையிலே தந்தை இறந்திருப்பின் மூத்த மகனும் தாயாருக்கு இளையமகனும் கடமை செய்தல் வேண்டும். மகன் இல்லாத பொழுது மனைவி, கணவன், மகள், சகோதரன், அவர் மகன், தந்தை, தாய், சகோதரி, சீடன், குரு, தோழன் ஆகியோரில் முன்னவர் இல்லாத இடத்து அடுத்தவர் கிரியைகள் செய்யலாம். மகன், மனைவி, மகள் தவிர்ந்த ஏனையோர் கிரியை செய்யின் அவர்கள் தம் தந்தை அல்லது தாய்க்குக் கடமை செய்தவராய் இருத்தல் வேண்டும்.

ஒருவர் அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களில் ஒன்றில் இறந்தால் தோசமுண்டு. எனவே இதற்கு சாந்தி செய்தல் அவசியம். வீட்டில் பூர்ணகும்பம், தண்ணீர், பசு, தீபம் இவற்றை மூன்று நாள், இரண்டு நாள் அல்லது ஒரு நாளாவது வைத்தல் வேண்டும். நீற்றுப் பூசணிக்காய் கட்டுதல், வீட்டில் உள்ளவர்கள் கையில் நூல் கட்டுதல் முதலியன நடைமுறையில் உள்ளது. பிரேதத்தைச் சுடலைகக்கு எடுத்துச் செல்லும் போது கமுகம்பிள்ளை வைக்கும் வழக்கம் உண்டு. சனிக்கிழமை பிரேத தகனம் செய்ய நேரிட்டால் பிரேதத்துடன் கமுகம்பிள்ளையும் எடுத்துச் செல்லும் வழக்கம் உண்டு.

அவிட்ட நட்சத்திரத்திற்கு ஆறுமாதமும், சதய நட்சத்திரத்திற்கு மூன்று மாதமும், பூரட்டாதி நட்சத்திரத்திற்கு ஒன்றரை மாதமும் உத்தரட்டாதி நட்சத்திரத்திற்கு ஒரு மாதமும் ரேவதி நட்சத்திரத்திற்கு பதினைந்து நாட்களும் தோசமாகும்.

*"அரிது அரிது மானிடராதல் அரிது*
*அதனிலும் அரிது கூன் குருடு செவிடு நீங்கிப்*
*பிறத்தலரிது"* என்கின்றார் ஔவையார்.

அரிய மானிடப் பிறவியை எடுத்த நாம் செய்யும் பாவ புண்ணியங்களே எம்முடன் வருவுதாகும். ஏனைய பொன்னோ பொருளோ எம்மைத் தொடராது.

*"வீடுவரை உறவு வீதிவரை மனைவி*
*காடுவரை பிள்ளை கடைசிவரை*
*யாரோ...."* என்ற பாடல்

நினைத்தற்குரியது இதனாலேயே இறப்பிற்கு முன் அனைத்துத் தர்மங்களையும் செய்துவிடல் வேண்டும் என்கின்றனர்.

தானம் செய்யும் போது தானம் நல்லதாக இருத்தல் அவசியம். தானம் வழங்குவோனும் நல்லவனாக இருத்தல் வேண்டும். தானம் கொடுக்கப்படும் இடமும் தகுந்த இடமாக இருத்தல் வேண்டும். இவையனைத்தும் சேரும் பொழுது செய்யும் தானம் ஒரு கோடி பயனைத் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானங்களில் சிறந்தது அன்னதானம் ஆகும். அன்னதானம் என்பது தியாகத்தின் அடிப்படையில் அமைந்தது. எந்தவொரு கர்மாவும் அன்னதானம் இல்லாமல் நிறைவடைவதில்லை. அன்னதானத்துக்கு மேலானதொரு தானம் என்றும் இருந்ததில்லை. அன்னம் மறைந்த முன்னோர்களது ஆசியைப் பெறச் செய்கின்றது. பித்துருக்கள் தோசத்தைப் போக்குகின்றது. நமது வம்சம் வாழ பித்துருக்களின் ஆசி தேவை மறைந்த முன்னோர்களுக்கு அன்னம் வழங்குவதே உயர்ந்த வழிபாடு. அவர்களைத் திருப்தி செய்ய அன்னதானமே சிறந்தது.

ஒருவன் இறந்தபின் அன்னதானம் செய்தால் இருந்து செல்லும் ஜீவன் மார்க்கத்தில் வருந்தாமல் செல்வான். தீபதானம் செய்தால் இருளில் பிரகாசத்தோடு செல்வான் ஐப்பசி, கார்த்திகை, மாசி ஆகிய மூன்ற மாதங்களிலாவது, சதுர்த்தசியிலாவது, பௌர்ணமியிலாவது ஒருவன் இறந்த திதியிலாவது தீபதானம் செய்வது சிறப்பாகும். ஒருவுன் இறந்தநாள் முதல் ஓராண்டு காலம் வரையிலும் தீபதானம் செய்தால் இறந்தவன் மேடு பள்ளம் இல்லாத நல்லதொரு வழியாக யமபுரியைச் சார்ந்து அவனது குலத்தைச் சார்ந்தவர்கள் யமபுரியிலிருந்தால் அவர்களையும் நல்லுலகம் சேர்த்துத் தானும் நற்கதியை அடைவான்.

ஒருவன் இறந்ததும் குடை மிதியடி (செருப்பு), தண்டம், வஸ்திரம், மோதிரம், உதககும்பம், ஆசனப்பலகை, அன்னம், பூஜைத் திரவியங்கள், பூணூல், செம்பு ஆகியவற்றைப் பிராமணருக்குத் தானமாகக் கொடுக்க வேண்டும். குடைதானம் செய்தால் ஜீவன் யமபுரியை நோக்கிச் செல்லும் போது குளிர்ந்த நிழல் நிறைந்த மார்க்கமாகச் செல்வான். மிதியடிதானம் செய்தால் குதிரை மேல் ஏறிச் செல்வான். செல்லும் வழியில் முள் முதலியவற்றால் துன்பம் நேராது வெற்றிலை, பாக்கு, புஸ்பம் ஆகியவற்றின் தானத்தால் யமதூதர்கள் மகிழ்ச்சி அடைந்து ஜீவனை வருந்தச் செய்ய மாட்டார்கள். ஆடைகளைத் தானம் செய்வதால் யமதூதர்கள் ஜீவனின் முன்பு நல்ல உருவத்துடன் காட்சியளிப்பார்கள். சிரார்த்த காலத்தில் கறுப்பு எள்ளைச் சேர்த்தால் பிதுர்த் தேவர்கள் மிகவும் திருப்திப்படுவர்.

'இறந்தபின் அவர்களுடைய பெயரில் செய்யும் தானத்தைவிட வாழும் காலத்தில் அவன் தானே முன்வந்து தானங்கள் செய்வானாகில் இறந்தபின் அவன் மோட்சமடைவான்' என கருடபுராணம் கூறுவது மனங்கொள்ளத்தக்கது.

இவ்வாறாக கிரியைகளாலும் தான தருமங்களினாலும் மனிதன் மேம் பாடடைகின்றான். இந்துக்களது வாழ்வில் இறப்பிற்கு முன்பும் பின்னும் கிரியைகள் சிறப்பிடம் பெறுகின்றன. எனவே வாழும் காலத்தில் நன்றே செய்து மறுமையிலும் நல்வாழ்வைப் பெறுவோமாக.

*திருமதி.திருமகள் குகதாசன் (ஆசிரியை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊழ்

உலகத்திலேயே உள்ள மக்கள் ஒரே மாதிரியான ஒரேயளவான துக்கங்களை அனுபவிப்பதில்லை. சிலர் தங்களுடைய வாழ்க்கையிலே கூடிய சுகத்தையும், சிலர் கூடிய துக்கத்தையும் அனுபவிக்கின்றனர். தேக சௌக்கியத்தோடும், செல்வம் செல்வாக்கோடும் ஒருசிலர் வாழவும் வேறுசிலர் நோய், வறுமை, பல்வகைப் பட்ட துன்பங்களாற் பீடிக்கப்பட்டு அல்லற்படுவதையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். நல்லவர்கள் கஷ்டப்படுவதையும், தீயவர்கள் சுகமாக வாழ்வதையும் காணலாம். சிலர் குறுகிய ஆயுளையும், சிலர் நீண்ட ஆயுளையு முடையவராகக் காணப்படுகின்றனர். அதிக பண்பாடும், கல்வி அறிவும் நற் குணாதிசங்களும் ஒருங்கே அமையப்பெற்ற குடும்பத்திற் பிறந்து உயர்ந்த வகுப்பினரென்று மற்றையோர் மதிக்கத்தக்கதாகச் சிலர் வாழ்ந்து வருகின்றனர். கல்வியறிவு, நற்பழக்கங்கள், நல்ல பண்பாடு ஆகியன சிறிதேனும் இல்லாத வர்களாயும், புலாலுண்ணல், மது அருந்தல் முதலிய தவறான முறைகளைப் பின்பற்று கிறவர்களாய்ச் சிலரும், வேறுசிலர் மேல் வகுப்பினராகச் சமுதாயத்தாலே கணிக்கப்படக்கூடியவர்களாகவும் காணப்படுகின்றனர். இவைகள் எல்லாவற்றிற்கம் காரணம் யாதெகச் சிந்திக்கும் போது ஊழ்வினையே காரணம் என்று புலப்படுகிறது. இது பற்றியே உமாபதி சிவாசாரியார்.

*"கன்மநெறி திரிவிதநற் சாதியாயு போகக்*
*கடனதென வருமூன்ற முயிரொன்றிற் கலத்தல்*
*தொன்மையதா மல்லதுண வாகா தானுந்*
*தொடங்கவை வினையாதே தோன்றுமாறித்*
*தன்மைதரு தெய்விகமுற் பவுதிகமான் மிகமாந்*
*தகையிலுறு மசேதனசே தனத்தாலுஞ் சாரு*
*நன்மையொடு தீமைதரு சேதனுக் கிவணூ*
*ணாடிலத னூழ்வினையா நணுகுந் தானே."*

என்று கூறுகின்றார். ஒருவனுடைய சூழல், ஆயுள், போகம், ஆகிய வற்றிலிருந்து அவருடைய பழைய வினைப் பயனைப்பற்றி அறியலாம். ஊழல்லாத வேறொன்றும் ஆன்மாவுககு அனுபவமாய் வருவதில்லை. முன்செய்தது. பின்னும் பின்செய்தது முன்னுமாகப் பக்குவ முறையில் கன்மத்தின் பயன்வந்து சேரும். அது தெய்வீகத்தாலும், ஆதிபௌதீகம், ஆதிஆன்மிகங்களோடு பொருந்துகின்ற சேதனம் (அறிவுடையன) அசேதனம் வாயிலாகவும் வரும். ஆன்மா முற்பிறவிகளிற் செய்த வினையின் பயனாகவே இப்பிறவியில் இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றது. ஆதிபௌதிகம் எனப்படுவது குளிர், வெப்பம், காற்றுமழை, மின்இடி ஆகியவற்றால் நேரிடும் துக்கமாம், தெய்விகம் எனப்படுவது, சனன, மரண, இயம வேதனையாகும். உயிர்களால் வருவது ஆன்மிகம் எனப்படும். அது சரீரம், மனம் சம்பந்தப்பட்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாதி, அரசர், மிருகங்கள், கள்வர், மனிதர், பசாசு ஆகியவை காரணமாக ஏற்படும் துக்கம் சரீர சம்பந்தமான துக்கமாகும். பிறருடைய செல்வம், சௌந்தரியம், கல்வி ஆகியவற்றைப் பார்த்துப் பொறாமை கொள்ளுதல் மனதிற்கு ஏற்படும் துக்கமாகும். இவ்விதமாகக் கன்மம் ஏற்படுகின்றது.

முற்பிறவிகளில் செய்த வினை செய்தவனையே தொடரும். ஒருவர் செய்தவினை இன்னொருவரைப் பாதிப்பதில்லை. செய்த வினையின் பலனை ஒருவன் அனுபவித்தே தீர்க்க வேண்டும். ஆகையால் இப்பிறவியில் இன்ப துன்பங் களை அனுபவிக்கும் போது செய்வினையின் காரணமாகவே அனுபவிக்கின்றோம் என்று நாம் அறிய வேண்டும்.

*"அறியாமை ஆணவநீ ஆனசுக துக்கங்*
*குறியா வினையென்று கொள்"*

என்று உண்மை விளக்கங் கூறுவதைக் கவனிக்கலாம்.

விதியென்னும் சுழலிலகப்பட்டு இன்ன செய்வதென்று தெரியாது மக்கள் கலக்கம் அடைகின்றனர். அவ்விதமான நிலையிலும் பொய்யானதும் நிலையற்றதுமான வாழ்க்கையிலே பற்று வைத்த அவர்கள் இருக்கின்றனர். பலவகைப்பட்ட அல்லல் தோன்றும் போது விதியை நொந்து மனம் நொந்து அழுகின்றனர். இந்நிலையை அருணகிரியார் மிகவுந் தெளிவாகக் கூறுகின்றார்.

*"கதிதனை யொன்றையுங் காண்கின்றிலேன் கந்தவேள்முருகா*
*நிதிதனை யன்னபொய் வாழ்விலன்பாய் நரம்பாற் பொதிந்த*
*பொதிதனையுங் கொண்டுதிண்டா டுமாறெனைப் போதவிட்ட*
*விதித னைநொந்து நொந்திங்கே யென்றன் மனம் வேகின்றதே"*

உலகத்திற் சிலர் முன் செய்த நல்வினையின் பயனாக இன்பத்தை அனுபவிப்பதைக் கண்டு சிலர் மனம் வருந்துவதைக் காணலாம். தாம் செய்து வைத்த புண்ணிய பாவத்தின் அளவுக்குத் தக்கபடியே பலனை அனுபவிக்க முடியும். வினையின் பயன் குறித்த அளவேயாகும். கடும் முயற்சி செய்த பொழுதிலும் ஊழ்வினை வலிமையுடையதாகக் காணப்படும். இதுபற்றியே குமரேச சதகத்தில்,

*"வங்காளம் ஏறுகினும் வாருகோல் ஒருகாசு மட்டன்றி அதிகமாமோ*
*வானேறி உயரப்பறந்தாலும் ஊர்க்கருவி வண்ணப்பருந்தாகுமோ*
*கங்காசலந்தன்னில் மூழ்கினும் பேய்ச்சுரக்காய் நல்லசுரையாகுமோ*
*கடலுக்குள் நாழியை அமுக்கியே மொண்டிடிற் காணுமோ நால்நாழிதான்*
*ஐங்காதம் ஓடினுந் தன்வினைகள் தன்னோடே அடையால் நீங்கி விடுமோ*
*யாரிடஞ் சென்றாலும் வெகுதொலைகள் சுற்றிலும் அமைத்தபடியன்றி வருமோ*
*மங்காத செந்தமிழ்க்கொண்டு நக்கீரார்க்கு வந்ததுயர் தீர்த்த முருகா*
*மயிலேறி விளையாடுகுகனே புல்வயல் நீடுமலைமேவு குமரேசனே"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறப்பட்டிருக்கிறது. இதிலிருந்து விதித்தளவே கிடைக்குமென்றறிகிறோம். இளம் வயது தொட்டு வறுமையினாற் பீடிக்கப்பட்டு அதிக துன்பத்தை அனுபவித்த ஒரு வாலிபன், தனக்குப் பெற்றோருடைய சொத்துக்கள் இல்லாமையினாலேயே தான் அத்துன்பமான நிலையை எய்த நேரிட்டது என்று ஒருநாள் யோசித்தான். சிறிது நேரத்தின் பின் அவனுக்கு ஒரு உபாயம் தோன்றியது. தான் சோம்பலை நிக்கி முயற்சி செய்தால் செல்வனாகலாமென்ற எண்ணத்துடன் ஒரு பெரியாரை அணுகி, தான் பயிரிடுவதற்கு ஏற்ற ஒரு நிலத்தைக் கொடுக்கும்படியும் தான் பெறும் வருமானத்தில் ஒரு பகுதியை நிலத்திற்காக அப் பெரியாருக்குக் கொடுப்பதாகவும் கூறி அவரிடம் நிலத்தைப் பெற்றான். அது நெல் செய்யும் நன்னிலமாகையாலும் அவ்வாலிபனுடைய விடாமுயற்சியின் காரணத்தாலும் முதல் வருடத்திலேயே பெரும் விளைவு அவனுக்குக் கிடைத்தது. இவ்வருவாய் வருவதற்குச் சில நாட்களுக்கு முன்பாக அவனுக்குக் குன்மநோய் உண்டானது. உணவு சீரணிப்பதில்லை. சோறு சாப்பிட முடியவில்லை. அவன் தனக்குள்ளே சிந்தித்தான். 'இளம் வயதில் நேரத்திற்குப் போசனம் அருந்த முடியாமல் வறுமைத் துன்பம் என்னை வாட்டியது. நான் விடாமுயற்சி செய்து பெற்ற ஊதியமும் பயனற்றதாயிருக்கிறது.

*"வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி*
*தொகுத்தார்க்கும் துய்த்த லரிது"*

என்று சொன்ன உண்மையை இன்று நான் அறிகின்றேன். நான் துக்கப்படுவதில் ஒன்றுமில்லை. 'செய்தீவினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால் எய்த வருமோ இரு நிதியம்' என்று ஔவையார் கூறியதை இளம் வயதிலேயே படித்திருக்கின்றேன். இன்றுதான் அனுபவ வாயிலாக அறிகிறேன். கன்மத்தின் பயனை அனுபவித்தே தீர வேண்டும். அனுபவிக்கும் போது முன்னை, வினையை ஒழிக்கும்படி இறைவனைக் கேட்க வேண்டும் 'வினையேன் அழுதாலுன்னைப் பெறலாமே' என்றல்லவா மணிவாசகப் பெருமான் கூறியிருக்கின்றார்' இவ்வாறு அவ்வாலிபன் சிந்தித்தான்.

விதிவசத்தாற் துன்பக்கடலில் ஆழ்ந்து மேலும் மேலும் கலக்கமுற்ற மனவேதனை அடைவார் பலர். ஆனால் முன் செய்த ஊழ்வினையை அனுபவிப்பதற்காக இச்சென்மத்தை எடுத்திருக்கிறோம். அனுபவிப்பதற்கேற்ற உடம்பைத் தந்து பிறவியெடுக்கத்தக்கதாகப் பிரமா விதித்திருக்கிறான், ஆகையால் நெஞ்சத்தைப் புண்ணாக்காமல் நிம்மதி அடைய வேண்டுமெனப் பட்டினத்தடிகளுடைய பாடலொன்று விளக்குகிறது.

*"அழுதாற் பயனென்ன நொந்தாற் பயனென்ன வாவதில்லை*
*தொழுதாற் பயனென்ன நின்னையொருவர் சுடவுரைத்த*
*பழுதாற் பயனென்ன நன்மையுந் தீமையும் பங்கயத்தோன்*
*எழுதாப் படிவருமோ சலியாதி ரென்னேழை நெஞ்சே"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்செய்த நல்வினை தீவினையின்படி நான்முகன் எழுதிவிட்டதை அனுபவிக்க நேரிடும் என்பது திண்ணம்.

பிரார்த்தம், சஞ்சிதம் என்பன பழைய வினைகளாகும். பல பிறவிகளிலும் அனுபவித்து முடிவுற எஞ்சி நிற்கும் வினை சஞ்சிதமாகும். சஞ்சித வினையிலிருந்து எடுக்கும் உடம்பானது இன்ப துன்பங்களை அனுபவிக்கச் செய்வது பிராரத்துவமாம். இப்பிறவியில் அனுபவிக்குங் காலத்தில் 'நான் செய்தேன்' 'இது என்னுடைய வல்லமை' என்று ஆணவ முனைப்பினால் கூறுவதும் செய்வதும் இப்பிறவியிலே பாவஞ் செய்வதற்குக் காரணமாகும். அவ்வித வினையே ஆகாமியம் எனப்படும். இப்பிறவியிலே செய்யப்படும் ஆகாமியம் என்ற கன்மவினைக்கு பிராயச் சித்தமுண்டு, செய்த பிழையை உணர்ந்து அதைப் பொறுத்தருளும்படி இறைவனை இறைஞ்சிநின்று இனிமேல் அவ்விதம் நடந்துகொள்ளாத மனவுறுதி கொண்டார்க்கு ஆகாமிய வினையின் பயன் குன்றும். வேத ஆகமங்களிற் சொன்ன பிரகாரம் ஒழுக்க சீலராய் வாழ்ந்து வருபவர்களுக்கும் பாவம் படிப்படியாக நீங்கும். களிக்கப்போய்ச் சேற்றைப் பூசினவன்போல் முன்செய்த அழுக்குகளை நீக்கிவிட எடுத்த இந்த செய்மத்திலும் பாவமாகிய அழுக்கைச் சேகரிப்பது எவ்வளவு அறிவுக்குறைவு. மனிதராய்ப் பிறந்தும் மாக்கள்போல நடந்து கொள்ளலாமா?

விதியைவெல்ல யாரால் முடியுமென்பதை விளக்கி ஔவையார் கூறியிருக்கின்றார்.

*"வினைப்பயனை வெல்வதற்கு வேதம் முதலாய*
*அனைத்தாய நூலகத்தும் இல்லை - நினைப்பதுஎனக்*
*கண்ணுறுவது அல்லாமல் கவலைப்படேல் நெஞ்சேமெய்*
*விண்ணு றுவார்க்கு இல்லைவிதி"*

முன்பிறவியிலே செய்த வினையின் பயனை வெல்லும் வழி வேதம் முதலாய ஒரு நூலிலும் சொல்லப்படவில்லை. ஆனால் முத்திநெறியில் நின்று ஒழுகுவாருக்கு அவர் தம்முள் நினைப்பதுபோலத் தோன்றுமேயன்றி விதியென்று ஒன்றுமில்லை. ஆகையால் வினைப்பயனை வெல்வதற்கு இசுவர தியானமே வழியாகும். இந்த உண்மை.

*"சிவாயநம என்று சிந்தித்து இருப்போர்க்கு*
*அபாயம் ஒருநாளும் இல்லை - உபாயம்*
*அதுவே மதியாகும் அல்லாத எல்லாம்*
*விதியே மதியாய் விடும்"*

என்று ஔவையார் கூறியிருப்பதிலிருந்து விளங்கும். சிவாயநம என்றுச் சரிப்போருக்குத் தீங்கு ஒன்றும் ஏற்படாதென்றும், துன்பத்தை வெல்லுவதற்கு அதுதான் ஒரேயொரு வழியென்றும் அவ்விதம் நடந்து கொள்ளாது கையாளும் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசனைகளையெல்லாம் விதிகொண்டு செலுத்தும் வழிகளாகும் என்பதை நாம் இச்செய்யுள் மூலம் அறியலாம்.

நமச்சிவாய என்பது தூலபஞ்சாட்சரம். போகம் அளிப்பது அதுவேயாகும். சிவாயநம என்பது சூக்குமபஞ்சாட்சரம். வீடு விரும்புவார் புகலும் நுட்பவைந் தெழுத்தாகும். சீவனும் அருளும் ஆன்மாவும், திரோதமும், மலமும் என்ற ஐந்து பொருள்களை இத்திருவைந்தெழுத்து உணர்த்துகிறது. அருளானது ஆன்மா வினுடைய இருளாசிய மலத்தை நீக்கிச் சிவத்தை அடையச் செய்யும். சிவாயநம என்பது குறிக்கும் பொருள் இதுவாகும். சிவானந்த அனுபூதியைப் பெற்ற மாணிக்க வாசகர் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகத்திலிருந்து இது புலப்படும்.

*"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்*
*தேனாய்இன் அமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான்*
*தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள் செய்தான்*
*ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே"*

தனது உள்ளத்திற் புகுந்து அருள் செய்ததன் பயனாக உடம்போடு கூடிய உயிர் வாழ்க்கையை வெறுத்து நீக்கும் நிலை மணிவாசகப் பெருமானக்கு ஏற்பட்டது. அவர் இன்னொரு இடத்திலே 'வினையிலே கிடந்தேனை புகுந்து நின்று போது நான் வினைகேடன் என்பாய்போல' என்று சொல்லும் போது வினையினால் தாக்குண்ட ஆன்மாவுக்கு வினையைக் கெடுக்கின்றவர் சிவபெருமானே என்று அறியத்தக்கதாக இருக்கிறது.

ஐம்பொறிகளின் வசமாகிக் கெட்டுப்போகின்ற நெஞ்சத்தை விழித்து உய்யும் வழி இன்னதென்று அருணகிரியார் கந்தரனுபூதியிற் கூறியிருப்பதைக் கவனிப்போம். உன்னை வந்து சேர்ந்தோருக்கு இல்லையென்று சொல்லாது உன்வசம் உள்ளதை அன்புடன் கொடு முருகனுடைய திருவடிகளைச் சிந்திக்க வேண்டும். பல வகைப்பட்ட துன்பங்களை முருகனுடைய திருவடித் தியானமாகிய நெருப்பாலே சுட்டெரிக்க வேண்டும். பிறப்பு இறப்புக்களுக்குக் காரணமாகிய அஞ்ஞானத்தையும் வினைகள் எல்லாவற்றையும் மெய்ப்பொருள் உணர்ச்சியின் மூலமாக நீக்க வேண்டும். 'இக்கருத்தையுடைய கீழே தரப்பட்டுள்ள பாடலே கந்தர் அனுபூதியிற் காணப்படுகிறது.

*"கெடுவாய் மனனே கதிகேள் கரவா*
*திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்*
*சுடுவாய் நெடுவே தனைதூள் படவே*
*விடுவாய் விடுவாய் வினையா வையுமே"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலிருந்து முருகப் பெருமானுடைய திருவுடித் தியானத்தின் மூலமே எங்களைப் பாதித்துக் கொண்டிருக்கும் வினையை நீக்கிவிடலாமென அறி கின்றோம். அவ்விதம் தியானத்தில் ஈடுபடும் ஒருவர் ஒழுக்கத்தினின்று சிறிதேனும் வழுவாத நெறியைப் பின்பற்ற வேண்டும். மனம், வாக்க, செயல் ஆகிய திரிகரணங்கள் சுத்தியுடையனவாக இருக்க வேண்டும். அவ்விதம் செய்யின் தியானம் பலனளிக்கும். இல்லற வாழ்க்கை நடத்தும் ஒருவன் ஞானியைப் போன்று உலக வாழ்க்கையை உடனடியாக நீக்க முடியாது. ஆனால், ஒழுக்க சீலனாக வாழலாம். அவ்விதம் வாழும் பொழுது பழைய வினையை அனுபவிக்குங்கால் இப்பிறவியிலே தீவினைகளை நீக்கி வாழ வேண்டும்.

ஓர் ஆத்மா முற்பிறவிகளிலே செய்த கன்மவினையை அனுபவித்தே தீர வேண்டுமென அறிந்தோம். அவ்வித கொள்கை ஒருவன் விடாமுயற்சி செய்தவற்குத் தடையாயும் இருகலாம். ஈசுவரதியானம் சீரியவொழுக்கம், மனவுறுதி ஆகிய வைகளின் மூலம் கன்மத்தை ஓரளவுக்கு வெல்லலாம் என்ற நம்பிக்கை இருக்க வேண்டும். அளவு கடந்த பிரயத்தனத்தினால் பகீரதன் ஆகாய கங்கையை உலகுக்கு கொண்டு வந்தானெனக் கூறுவர். இக்கொள்கையை வற்புறுத்துஞ் செய்யுளொன்று திருக்குறளிற் காணப்படுகிறது.

*"ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்*
*தாழா துஞற்று பவர்"*

அளவு கடந்த பக்தியுடை மார்க்கண்டேயர் இயமனை வென்றார். ஒரே பிடிவாதமான பக்தியுடன் திருக்கயிலாயத்திற்குப் போய்க்கொண்டிருந்த அப்பர் சுவாமிகள் முன்பாக இறைவன் தோன்றினார். உண்மையான அடியவர்களுக்கு கோளும் நாளும் நன்மை செய்யுமென திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய கோளறு பதிகமூலம் அறிகிறோம். இல்லறத்திலுள்ளவன் ஆற்றிலோடும் தண்ணீரோடு ஓடிச் செல்லும் பொருள் போலத்தான் வீதியிலகப்பட்டு விட்டதாக எண்ணி மனந் தளரக்கூடாது. விடா முயற்சியும் அறவாழ்வும் பயனளிக்கும் எல்லாவற்றிற்கும் மேல் இறைநம்பிக்கை உற்ற நேரத்திற் துணைபுரியும். 'மந்திரமும் தந்திரமும், மருந்து மாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான்தன்னை' என்று அப்பர் தேவாரம் ஆறுதல் அளிக்கிறது. மாறாதநோய் இருவகைப்படும். எவ்வித வைத்திய சிகிச்சையினாலும் குணமடையாத நோய் ஒன்றாகும். மற்றது பிறவிப் பிணியாகும். இருவகைப்பட்ட நோய்களுக்கும் ஔடதம் வழங்குபவர் இறைவனாகும். ஆகையால் தளராத உள்ளத்தோடும் நம்பிக்கையோடும் இறைவனைப் பிரார்த்தித்தால் கன்மவினையின் பலங் குறைந்து பலன் கிடைக்கும். என்பதை அனுபூதிமான்கள் கூறுவதிலிருந்து அறியலாம். உலகெங்கும் இறைவனருள் பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்திப்போமாக.

*தொகுப்பு: (முப்பொருள் உண்மை விளக்கம்)*
*மு. இளையதம்பி*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணிச் சதுர்த்தி

சதுர்த்தி என்பது ஒரு திதி. ஒவ்வொருமாதாம் அமாவாசைக்கு பின்னா் நான்காம் நாள் வருகின்ற சதுர்த்தியன்று வநாயகப் பெருமானை நோக்கி விரதம் அனுட்டிப்பது இந்துக்களிடையே வழக்கமாக இருந்து வருகின்றது. ஆவணி மாத பூர்வபக்க சதுர்த்தி அவற்றுள் விஷேடமாகக் கூறப்பட்டுள்ளது. மாதச் சதுர்த்தி எல்லாவற்றிலும் விதம் அனுட்டிக்காமல் விட்டாலும் ஆவணிச் சதுர்த்தியன்று ஆதல் விநாயகரை நோக்கி விரதமிருந்து அனுக்கிரகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

தனக்கு மேலே வேறொருதலைவன் இல்லாதவன் விநாயகன். எனவே விநாயகா் முழுமுதற்கடவுள் ஆவா்.விநாயகனை உள்ளனபோடு வழங்குபவா்களின் வெம்மையான வினைகள் வேரோடு களையப்படுகின்றனா். அவா்களுக்கு வருகின்ற விக்கினங்கள், வில்லங்கங்கள், இடர்கள், இடையூறுகள் அனைத்தும் முற்றாகத் தீர்க்கப்படுகின்றன. விநாயகரை விரும்பி இடைவிடாது வழிபட்டு வருபவா்களுக்கு மனததூய்மை, மொழித்தூய்மை, செயல்த்தூய்மை என்னும் திரிகரணசுத்தி கிட்டு கின்றது. அதன் காரணமாக எடுத்த காரியங்கள் அனைத்தும் சிரமமின்றிச் சிந்திக் கின்றன. திருவும் கல்வியும் சீரான வாழ்வும் அவா்களுக்கு தழைத்து ஓங்குகின்றன. நினைத்தாரியங்களோ எடுத்த கருமங்களோ முட்டின்றி அடையப்பெறுதலுக்கு விநாயகரின் திருவருள் மிகவும் இன்னியமையாதது என்பதை உணா்த படியால்தான் எக்கருமத்தையும் எச்செயற்பாட்டையும் தொடங்கும் பொது முதலில் விநாயகரை நினைத்து வணங்கி வழிபட்டு ஆரம்பிக்கும் மரபு இந்துக்களிடம் தொன்று தொட்டு இருந்து வருகின்றது.

ஓம் என்னும் பிரணவ மந்திரம் மந்திரங்கள் எல்லாவற்றிற்கும் மூலமாகவும் ஆதியாகவும் அமைந்ள்ளது. ஓம் என்னும் வடிவமாகவும் பிரணவப் பொருளாகவும் விநாயகர் விளங்குகின்றாா். 'பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்' எனப் பழந்தமிழ் நீதி நூல் ஆன வெற்றி வேற்கை கூறுகின்றது.

சிந்தூரன் என்பவன் பல வரங்கள் பெற்று அவற்றின் பலத்தினால் தேவா்களுக்கும் பூவுவலகில் உள்ளவா்களுக்கும் இன்னல்களையும் தொல்லை களையும் கொடுத்து வந்தான் தேவா்களை அழித்தொழிக்க எண்ணினான் அத்தகைய கொடியவனான சிந்தூரனை சங்காரம் செய்து தேவா்களை காப்பாற்றுவதற்கு விநாயகா் அவதரித்த திருநாள் தான் ஆவணி சதுா்த்தியாகும்.

முன்பு ஒரு முறை திருக்கைலாயத்திற்குப் பிரம்ம தேவா் சென்று பிரம்மதேவனை தரிசித்த வேளையில் நாரதரும் அங்கு ஒரு கனியுடன் வந்திருந்தாா்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது பிரம்ம தேவர் நாரதர் கொண்டு வந்த கனியை வாங்கி முருகனுக்கு கொடுக்கும் படி சிவனை வேண்ட, சிவனும் அப்பழத்தை முருகனிடம் வழங்கினார். இதனைக்கண்ணுற்ற மூத்த பிள்ளையான் விநாகர் சினங்கொண்டு பிரம்ம தேவரை நோக்கினார்.விநாயகரின் கோப நோக்கு பிரம்மனைப் பயங்கொள்ளச் செய்கின்றது. தன் பிழையை பொறுத்தருளும் படி பிரம்மன் விநாயகரை பணிந்த நின்றான். இக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த சந்திரன் தன்னையமறியாமல் ஏராளமாகச் சிரித்து விட்டான் சந்திரனின் இச்சிரிப்பு பெரியோர்களை அவதித்த குற்றமாகக் கொள்ளப்பட்டது. பெரியோர்கள் கூடியிருந்த அவையில் அடக்கம் பேணாது ஏளனச்சிரிப்பு சிரித்த சந்திரன் விநாயகனால் சபிக்கப் பெற்றான் சந்திரன் அதன் பிரகாசத்தை இழக்கும் படி நேர்ந்தது அச்சாபத்தினால்.

தேவர்கள் சந்திரனுக்கு சாபவிமோசனம் அளிக்குமாறு விநாயகரை மன்றாடினர் கருணை கொண்ட விநாயகர் 'வருடத்தில் ஆவணி மாதத் சதுர்த்தியன்று சந்திரனைப்பார்ப்பவர்களுக்கு துன்பம் அடைவார்கள்' என்று கூறிச்சந்திரனுக்க கொடுக்கப்பட்ட சாபத்தைக் குறைத்த விட்டார். மேலும் சதுர்த்தி தோறும் வரதமிருந்து தம்மை வழிபடுபவர்கள் புண்ணியப் பேறுகளை அடைவர் என்று விநாயகர் திருவருள் பாலித்தார்.

விகட சக்கரர் விநாயகன் ஆடிய நடனத்தை தேவர்கள் எல்லோரும் பார்த்து போற்றி மகிழ்ந்தனர். ஆனால் சந்திரனுக்கோ சிரிப்பு வந்து விட்டது:சிரித்து விட்டான் அதனால் சந்திரனுக்கு விநாயகர் காபம் கொடுத்து சதுர்த்தி தினத்தன்று சந்திரனைப்பார்ப்பவர் பாவம் செய்தவர் ஆவர். என்பதே அச்சாபம் இன்னும் சதுர்த்தியன்று தோன்றும் 5ம் பிறைச்சந்திரனை பார்ப்பதை மக்கள் தவிர்த்து வரும் வழக்கம் காணப்படுகிறது.சந்திரன் விநாகரை வணங்கி அருள் பெற்ற தினமும் ஆவணிச் சதுர்த்தி நாளே. ஆவணிச் சதுர்த்தி வரதத்தை அனுட்டிப்பவர்கள் விநாயகர் திருவருட்கடாச்சம் பெற்று இகபரசுகங்களைப் பெறுவர். வாழ்க்கையில் எத்துன்பமோ இடரோ ஏற்படாது அஞ்ஞான இருள் அகன்று மெஞ்ஞானம் கைவரப் பெறும் வாழைப்பழம், மாம்பழம், பலாப்பலம் எனும் முக்கனிகள் கரும்பு, எள், கடலை, பொரிஉருண்டை என்பவற்றை விநாயகருக்க நிவேதித்து கணேச அஸ்டகம் கூறி பூசை செய்த அவரை வழிபடவேண்டும்.

விநாயக புராணம் படிப்பதாலும் நல்ல பயனைப் பெற முடியும் விநாயகரை அறுகம்புல் கொண்டு அச்சரிப்பது உவந்த முறையாகும்.

விக்கினங்கள் நிறைந்த இன்றைய காலகட்டத்தில் விக்னேஸ்வரனான விநாயகப் பெருமானைத் தொழுது வணங்கி வழிபாடு செய்தலே விக்கினங்கள் நீங்கப்பெற்று நாம் உய்வு பெறுவதற்கு உரே வழி என்பதை உய்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி

சக்தி வழிபாடு மிகத் தொன்மையானது சக்தியை நாயகியாகக் கொண்டு வடைபெறுவது நவராத்திரி விழா துர்க்கை இலக்குமி சரஸ்வதி எனும் முப்பெருந்தேவியர்களை நோக்கி பூசை வழிபாடு விரதம் அனுட்டித்தல் விழாவெடுத்தல் என்பன நவராத்திரி காலங்களில் நிகழ்த்தப்படுகின்றன. சகல உலகங்களையும் படைத்து அவற்றையெல்லாம் இயக்கி காத்து வருகின்ற மாபெரும் சக்தியைப் மகாசக்தி என்று ஆதிபராசக்தி என்றும் நம் முன்னோர்கள் கொண்டு அச்சக்தியை பயபக்தியோடு வழிபட்டு வரயிலானர். இது இந்துப்பண்பாடாக வளர்ந்த இன்னும் இந்து மக்களால் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. சக்தி தத்துவத்தை சாக்தம் என்று அழைக்கின்றனர். சாக்தம் அறுவகைச் சமயங்களுள் ஒன்றாக வகக்கப்பட்டுள்ளது. சைவம், வைஷ்ணவம், கானாபத்தியம், கௌமாரம், சௌரம் என்பன ஏனையவை . இந்து சமயம் கொண்டுள்ள ஆறு உட்பிரிவுகளாகவே அவற்றை ஆதிசங்காரார் குறிப்பிடுகின்றனர். சாக்தம் ஒரு காலத்தில் பாரததேசம் முமுவதும் தனித்து தனிநெறியாக விள்கியது அதன் சுடுகள் சிற்சில பகுதிகளில் இன்றும் காணப்படுகின. ஆயினும் பின்னர் மற்றநெறிகளுடன் கலந்து சமய வேறுபாடின்றி சக்தியையும் வழிபாடு செய்யும் முறை ஏற்பட்டு விட்டது. சிவனின் தேவியாகவும் விஷ்ணுவின் சகோதரியாகவும் விநாயகன் முருகன் ஆகியோரின் தாயாகவும் பராசக்தி விளங்கும் போது வைதீக சமயங்களிற்கிடையே பேதம் இருக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது. தற்காலத்தில் புற சமயிகளும் கலந்து கொள்ளும் அளவிற்கு நவராத்திரி விழா தேசிய விழாவாகி வருகிறது. கோயில்கள், வீடுகள், பொதுமன்றங்கள். பாடசாலைகள், அலுவலகங்கள், வேலைத்தலங்கள், கால நிலையங்கள் போன்ற பல்வேறு இடங்களிலும் இன,மத, மொழி வேறுபாடின்றி நவராத்திரி விழா கொண்டாடப்பட்டு வருகிறது.நாட்டின் பல்லின பழமொழி பல்சமய மக்களிடையே ஜக்கியத்தையும் தேசிய ஒருமைப்பாட்டையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தக் கூடிய சிறந்த ஊடகமாக நம் நாட்டில் நவராத்திரி விழா அமைவன மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

சக்தி என்றாலே ஆற்றல், வல்லமை,வலு, உந்து விசை என்று தான் பொருள் கொள்கிறோம்.இந்த வகையில் நோக்கும் போது சக்தியின்றேல் எவருக்குமே வாழ்வில்லை இயக்கமில்லை என்ற நிலை வந்து விடுகிறது. சக்தியை வேண்டி நிற்பவர்கள் இவர்கள் சக்தியை வேண்டி நில்லாதவர் மற்றையோர் என்று குறிப்பிடுவதற்கில்லை. எல்லோருக்கும் சக்தி வேண்டியதே என்பது உண்மைநிலை இந்து மத மக்கள் எல்லா வகைத் தோற்றத்திற்கும் , இயக்கத்திற்கும் அவற்றின் வாழ்விற்கும் ஆதாரமாகவும் அடிப்படையாகவும் அமந்தள்ள மகா சக்திக்கு தெய்வ வடிவம் கொடுத்து மிக உயர்ந்த நிலையை வழங்கி விழாவெடுத்து வழிபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதில் மனத்திருப்தி பெற்று வருகின்றனர். நவராத்திரி விழாவும் மகா சக்தியை பல்வேறு தெய்வ வடிவங்களில் கண்டு கழித்து வணங்க வழிப்பட்டு அழகு அலங்காரம் செய்து பக்தி செலுத்தி கலைகளை சமர்ப்பித்து ஆராதிப்பதாகவே அமைகின்றது. இத்தெய்வீக விழாக்களையும் சடங்கு சம்பிரதாயங்ககளையும் பக்தியும் அழகும் சொட்டும் வண்ணம் பெருஞ்செலவு செய்து உலகியற் கண்ணோட்டத்தில் செய்து பார்ப்பதில் எத்துணை ஆனந்தமும் மனநிறைவும் அடைகின்றார்கள் என்பது அதில் ஈடுபாடு கொண்டு திழைத்தவர்களுக்குத்தான் புரியும் அகிலாண்ட நாயகியான அம்பிகை விரும்பு வெறுப்பு அற்றவள். முதற்காரனமான சக்தி, சகல பிரமாண்டங்களையும் ஈன்ற தாய் கருணைக்கடல் ஞான உருவினள் பிரும்மானந்த வடிவினள், அத்தகைய சிறப்புக்களையுடைய அன்னையை மூவுலகும் காப்பவளை அபிராமவல்லியை அண்டமெல்லாம் பூத்தாளை பரமேஸ்வரியை தாங்கள் பணிந்து வழிபடுவதும் விழாக்கள் எடுப்பதும் நமது மகிழ்ச்சிக்காகவும் உய்வுக்காகவுமே ஆகும்.

உலக மாதாவாகிய அம்பிகையின் கண்களின் அசைவில் தான் காலங்கள் தோன்றி இயங்குகின்றன. என்கின்றார் ஆதிசங்கரர்.ஈரேழு புவனங்களையும் எண்ணற்ற உயிரிணங்களையும் நான்கு மறைகளையும் சகல கலைகளையும் தன்னுள் அடக்கி வைத்திருப்பவன் சிவன் அத்தகைய அரன் தேவி பாகத்தினுள் அடக்கம் அப்படி யாயின் அம்பிகையின் அருமைபெருமைகளை வார்த்தைகளில் வடிக்கவும் முடியும்?

மனிதர்களுக்கு இயல்பாகவே ஒரு வேட்கை இருந்து வருகின்றது. அது என்னவெனில் சகல வல்லமைகளும் பொருந்தி கடவுள்களை உலகியற் கண்ணோட்டத்தில் வைத்து அவர்களுக்கு பிறந்த தினம், பூப்பு நீராட்டல், திருமணம் மற்றும் பல்றேு சடங்குகள் விழாக்கள் ஆகியவற்றை மனிதர்களுக்கருச் செய்யுமாப்போல நிகழ்த்திப் பார்க்க வேண்டும் என்பதேயாகும். மேலும் உலகியல் விடயங்கள் ஒவ்வொன்றிற்கும் பொறுப்பாகவும் அதிபதிகளாகவும் தெய்வங்களை நியமிக்கும் பாங்கு மனிதர்களிடையே இருந்து வந்துள்ளது. இந்தவகையிலே வீரத்திற்கு துர்க்கையையும் செல்வத்திற்கு இலக்குமியையும் கல்விக்கு சரஸ்வதியையும் பொறுப்பாளர்களாகவும் அதிபதிகளாகவும் கொள்கின்றனர். இம்மூவரும் ஆதிபராசக்தியின் அம்சங்களாகவே போற்றப்படுகின்றனர். நவராத்திரி விழாவின் போது துர்க்கை , இலக்குமி, சரஸ்வதி ஆகிய தெய்வங்களுக்கு முறையே முதல் மூன்று நாட்களும் நட மூன்று நாட்களும் விழா எடுக்கின்றனர். பக்தியுடன் அழகு அலங்காரங்கள் கொலுவைத்தல், கலைநிகழ்ச்சிகள் சுவையான உணவுகள் என்பன முக்கிய இடம்பெறுகின்றன. இவற்றிற்காக பணம் பொருள் காலம் சக்தி என்பன செலவு செய்யப்படுகின்றன. இவற்றை வீண் செலவுகள் என்றோ கேளிக்கைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களியாட்டங்கள் என்று கூறுவதற்கில்லை. விளங்கிக் கொள்ள முடியாத இறைவனின் தத்துவங்களுக்கு மனிதர்கள் தம்மால் இயன்ற வரைக்கும் அவற்றை உருவகப்படுத்தி தமது அறிவிற்கு எட்டிய வகையில் உலகியற் பார்வையில் விளக்கங்களை காண முயலும் கருமங்களாகவே அவை உள்ளன. மேலும் இவற்றிற் குரிய பிரதிபலன்களை இவற்றை நடத்துபவர்கள் பெற்றுக் கொண்டு தான் இருக் கின்றார்கள் அம்பிகையின் கடைக்கண்பார்வை மட்டும் கிடைத்து விட்டாலே சகல ஐசுவரியங்களும் பெறப்பட்டு விடும் எனும் அசையாத நம்பிக்கையும் மக்களிடம் நன்கு வேரூன்றியுள்ளது. மக்கள் ஒரு வித இனம் புரியாத சுகத்தையும் மன நிறைவையும் அடைகின்றனர் என்பதில் ஐயமில்லை .சிற்றின்ப சுகமாக இருப்பினும் மனிதர்கள் ஈற்றில் அடைய விரும்பும் பேரின்ப சுகத்திற்கு அவை வழிவகுக்கின்றன. எனவே நவராத்திரி விழாக்கள் மக்கள் மனங்களை பண்படுத்தி வாழ்க்கையை நம்பிக்கையோடு எதிர்கொள்ளச் செய்வதற்கும் மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே என்ற நிலைக்கு அவர்களை இட்டுச் செல்வதற்கும் மண்ணில் தெய்வங்களின் அருள் பெற்று நல்ல வண்ணம் வாழ முடியும் என்ற நம்பிக்கை ஒளியை மக்கள் பெற்றுக் கொள்ளச் செய்வதற்கும் பெரிதும் உதவுகின்றன. இந்த முறையில் இந்துப்பண்பாடு இந்துக்கலாசாரம் என்பன பன்னெடுங்காலமாக வளர்ச்சி பெற்றும் மக்களை வாழ்வித்து வந்துள்ளமை நோக்கற்பாலது. எமது காலத்திலும் இத்தகைய இந்துப்பண்பாடு போற்றி வளர்க்கப்பட வேண்டிதும் நமது கடமையாகும். பாட சாலைகளில் நவராத்திரி விழாவினை கொண்டாடுவதன் மூலம் இக்குறிக்கோளை நன்கு அடைய முடியும் இந்துப்பண்பாடு இந்து சமய விழுமியங்கள் ஆகியவற்றை இளவயதிலிருந்தே மாணவர்களிடம் வளர்க்கும் பொறுப்பினை பாடசாலைகள் ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியம் . இன்றைய அவசர உலகில் குடும்பமோ ஏனைய சமூக நிறுவனங்களே இப்பொறுப்பினை ஏற்கக் கூடிய நிலையில் இருப்பதாக பெரும் பாலும் தோன்றவில்லை.

ஆண்டு தோறும் புரட்டாதி மாதத்தில் வருகின்ற அமாவாசையை அடுத்து முதலாம் நாள் பிரதமை தொடக்கம் நவமி ஈறாகவுள்ள ஒன்பது நாட்கள் நவராத்திரி காலம் ஆகும். பத்தாம் நாள் தசமித்திதி விஜய தசமி எனப்படும். விரதம் அனுட்டிப்பவர்கள் நவராத்திரி தொடங்குவதற்க முதல் நாள் அமாவாசை என்று ஒரு நேரம் மட்டும் உணவுண்டு தொடங்கிய நாளிலிருந்து எட்டு நாட்கள் பழம் அல்லது இளநீர் அல்லது பால் இரவில் அருந்தி மகா நவமியன்று முழுநாளும் உபவாசம் இருந்து பத்தாம் விஜய தசமியில் அன்று உணவு உட்கொண்டு பராயணம் செய்வர். இவ்வாறு மேற்கொள்ள இயலாதவர்கள் ஒவ்வொருநாளும் ஒரே நேர உணவு உண்டு நவமியில் உபவாசம் இருந்து மறுநாள் தசமியில் உணவு உட்கொண்டு விரதத்தை நிறைவு செய்வர். குறிப்பாக கல்வி கற்கிற மாணவர்கள் இவ்விரதத்தினை அனுட்டிப்பதனால் நல்ல பயனை அடைவர். விரத நாட்களில் அகத்தூய்மை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறத்தூய்மையுடையவராக கடவுள் சிந்தனையாக வாழப்பழகிக் கொள்ளுதல் வேண்டும். தூய எண்ணங்கள் பண்பான பேச்சு நற்செய்கைகள் மூலம் தம்மை ஒரு சிறந்த மானிடன் ஆக்கிக் கொள்வது விரதத்தின் நோக்கம்.

வீடுகளிலும் நவராத்திரி விழா கொண்டாடப்படுகிறது. ஒன்பது கன்னிப் பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு நாளுக்கு ஒருவராக அவர்களை நீராட்டி புத்தாடை புனைந்து மாலை அணிதல் வாசனைப் பொருட்கள் மற்றும் கண்ணாடி குங்குமம் மஞ்சள், சந்தனம் முதலிய மங்கலப் பொருட்கள் ஆகியவற்றை வழங்கி வழிபாடும் செய்யும் வழக்கமும் உண்டு இவர்கள் இரண்டிற்கும் பத்திற்கு இடைப் பட்ட வயதினராக இருப்பார்.

இன்னொரு முக்கியமான அம்சம் நவராத்திரியில் கொலுவைத்தல் ஆகும். இது ஓர் அழகு அம்சம். நவராத்திரி விழாவில் அழகு ஆரிக்கப்படுகிறது. எல்லாமே ஒழுறங்காக இருக்கும் போது அங்கு அழகு மிளிர்கிறது பேரழகும் பேரெழிலுமாக காட்சி தருகின்ற அம்பிகையை கொலுபீடத்தின் நடுவில் வைத்து அழகு செய்து வழிபாடு செய்வர். மாலை வேளையில் அண்டை அயலவர்களை அழைத்து அவல் கடலை பலகாரங்கள் சுவையுணவுகள் பழங்கள் ஆகியவற்றை அம்பாளுக்கு நிவேதித்து ஆடல்பாடல் நிகழ்த்தி வழிபடுவர்.

கிருஷ்ணன் நவராத்திரியின் முதல் நாள் கைடவன் மது என்னும் இரு அசுரர்களைக் கொண்டான். அநீதியை அழித்து நீதியை நிலைநாட்டி வைத்த மையை குறிப்பதாக நவராத்திரி நோன்பும் அதன் நினைவாக கொலுவில் பொம்மை களை வைத்து அழகு செய்வதாகக் கூறுவர்.

நவராத்திரி என்றும் தேவி பூசை என்றும் மகா நவமி நோன்பு என்றும் பற்பல பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகிறது. நவராத்திரி இறுதி நாளன்று புத்தகங்கள் பென்சில்கள் பேனாக்கள், வீணை முதலிய இசைக்கருவிகள் மற்றும் கலையோடு தொடர்பான பொருட்கள் யாவற்றையும் பூசையில் வைத்து சரஸ்வதியை வழிபடுவர். அடுத்த நாள் தசமியன்று காலையில் இவற்றை எடுத்துப்படித்தும், எழுதியும் இசைக்கருவிகளை மீட்டியும் நாள் வேலையை தொடங்கும் வழக்கமும் இருந்த வருகின்றது. விஜய தசமியியன்று பிள்ளைகளுக்கு ஏடு எழுதல் அல்லது வித்தி யாரம்பம் செய்து வைக்கப்படுகிறது. இதை ஒரு சடங்காகவே அன்று நிறைவேற்றுவர் நவராத்திரி காலங்களில் அம்பாளை கும்பத்தில் பூஜிப்பர் பத்தாம் நாள் தசமி யிலன்று குடும்பத்தை எடுத்து அதனுள் உள்ள நீரை ஓர் புனித இடத்தில் சேர்ப்பர். இதனை கும்பச்சரிவு என்பர். நவதானியங்கள் விதைக்கப்பட்டு அதன் மேலேயே கும்பத்தை வைப்பது வழக்கம் நவதானியம் பத்தாம் நாள் காலையில் நன்கு முளைவிட்ட நிலையில் இருக்கும் இம் முளைகள் சூடுபவர்களுக்காக வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தாம் நாள் மகா நோன்பு முடிவடைகின்றது. இதனை மானம்பு என்று திரித்து கூறுவர் கோயில்களில் வன்னி வாழை வெட்டும் நிகழ்ச்சி நடைபெறும். அம்பாள் எழுந்ருளி வீதி வலம் வந்து வாழை மரம் வெட்டும் வழக்கம் இருந்து வருகின்றது. விஜய தசமியில் அம்பு போடுதல் என்று இதனைக் கூறுகின்றனர். மடமையின் உருவான மகிஷாசூரனை அம்பாள் அழித்த வெற்றித் திருநாளாக விஜய தசமி கொண்டாடப்படுகிறது. அறியாமையை அகற்றிய இந்த நன்நாளில் அறிவை நாடிச் செல்லும் முதல் நிலையாக வித்தியாம்பரம் செய்தல் எத்துணை பொருத்தமான செயல் என்பது உணர்த்தப்பாலது.

அன்னையின் துர்க்கை வடிவம் எம்மிடமுள்ள அரசுக்குணங்களையும் விலங்கு மனத்தினையும் அரக்கத்தன்மைகளையும் அகற்றி எம்மைச் சாத்வீக ம் நிறைந்த மனிதர்களாக்கி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்விக்கின்றது. துர்க்கை தரும் வீரம் பாவங்களை விலக்குவதற்கு எமக்கு வேண்டிய துணிவினைத் தருகிறது. மகாலட்சுமி வடிவம் மனித வாழ்வில் ஒழிக்கப்பட வேண்டிய வறுமையை அழிப்பதற்க செல்வத்தை நமக்கு வழங்கி எம்மை வாழ்விக்கின்றது. ஈதல் அறம் என்பதை உணர்ந்து செல்வத்தை பெற்று பிறரின் வறுமையைப் போக்கும் போது தான் அன்னை மகாலெட்சுமி மனம் மகிழ்கிறாள் சரஸ்வதி வடிவம் மனித வாழ்வில் இடம் பெறக்கூடாத அறியாமையை அகற்றி அறிவொளி ஏற்றி மக்களை வாழ்வாங்கு வாழ வழிவகுக்கிறது.

வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றும் மனித வாழ்க்கைக்கு முக்கியமானவை. வாழ்க்கையில் இம்மூன்றையும் அடைவது அதன் குறிக்கோள். இம்மூன்றினதும் ஒருங்கிணைந்த வளர்ச்சி மனிதனில் நிகழும் போது தான் அவன் பூரணத்துவம் பெற்ற முழு மனிதனாக நிறைமனிதனாக இன்னும் சொல்லப் போனால் ஆளுமை நிறைந்த மனிதனாக ஆக்கம் பெறுகின்றான்.வீரம், செல்வம், கல்வி ஆகியற்றின் முழுமையான வளர்ச்சி மாத்திரம் ஓருவனை செம்மையான நிறை மனிதன் ஆக்கி விட மாட்டார் என்பது இந்து சமயக் கொள்கை வீரத்தின் பெரு வளர்ச்சியும், செல்வத்தின் பெருவிருத்தியும் கல்வியின் மிகைப் பெருக்கமும் விலங்கு இயல்பு கொண்ட மனிதன் ஒருவனில் ஏற்படுமாக இருந்தால் விளைவு நன்மையாக இருக்கமாட்டாது. மாறாக மனித குல நாசத்திற்கே வழி வகுப்பதாக அமையும் எனவே தான் இந்து சமய தெய்வங்களோ வீரம், செல்வம், கல்வி மூன்றையும் பொருந்திக் காட்டுகிறது. வீரம், செல்வம், கல்வி ஆகியவற்றின் வளர்ச்சியும் பெருக்கமும், தெய்வத்திருவருளினால் கிடைக்கப் பெற்றமையை மனிதர்கள் உணர்வதாலும் அதற்காக தெய்வங்களும் நன்றி தெரிவிப்பதாலும் ஏற்படுகின்ற நன்மையாதெனில் வீரத்தையும், செல்வத்தையும், கல்வியையும் பிர யோகிக்கும் போதும் இறை சிந்தனையுடன் அவர்கள் செய்வதேயாகும். இறைவனை நினைத்து ஆற்றப்படும் கருமங்கள் நிச்சயம் கைகூடுவதோடு நல்ல விளைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் தருகின்றன. எனவே தான் வீரம், செல்வம்,கல்வி என்பவற்றின் வளர்ச்சி இறைசிந்தனையின் அடிப்படையில் திருவருட்பேறாக தூய்மையின் வடிவமாக மனிதர்களில் ஏற்பட வேண்டும் என்று இந்து சமயம் வலியுறுத்துகிறது. இந்த வகையில் எழுந்தது தான் நவராத்திரி வழிபாடும், விரதமும், விழாவும் ஆகும்.

## தீபாவளிப் பண்டிகை

இந்து சமயத்தவர்கள் பல பண்டிகைகளைக் கொண்டாடுகின்றனர். பண்டிகைகள் கொண்டாடப்படுவதினால் வாழ்கையில் ஒரு வகை மகிழ்ச்சியும் தெம்பும் உற்சாகமும் ஏற்படுகின்றன. ஓய்வும் கிடைக்கிறது. ஓய்வு காலத்தை நற் சிந்தனை நற் செயல்களில் கழிக்கவும் உதவுகின்றன. வாழ்க்கையில் சில மணி நேரங் களாவது துன்பங்களை துயரங்களை மறந்து குதூகலிக்கப் பண்டிகைகள் வாய்ப் பளிக்கன்றன. ஆன்மிகச்சிந்தனைகள் பண்புகள் மனிதரில் மலர்ச்சி பெறுவதற்கு பண்டிகைகள் தளம் அமைக்கின்றன.

இந்துப் பண்டிகைகள், ஆன்மீகத் தத்துவ அடிப்படைகளில எழுவன. ஆன்மீகத் தத்துவத்தை ஆதாரமாகக் கொண்டு புராணங்கள் புனையப்படுகின்றன. புராணக்கதைகள் தேவர்கள் அசுரர்கள் ஆகியோரிற்கிடையிலான போராட்டங்களை மையமாகக் கொண்டவை இவை முறையே நன்மைக்கும் தீமைக்கும் இடயிலான போராட்டங்களேயாகும். எத்துணை கஷ்டங்கள் நேரினும் இறுதியில் தீமைகள் அழியும் நன்மைகள் வெல்லும் எனும் உண்மை நிலை நாட்டப் பெறும். ஒவ்வொரு பண்டிகையும் தோன்றுவதற்கு காரணமான அடிப்படை உண்மையும் அதனை எளிதில் விளக்குவதற்கு காரணமான அடிப்படை உண்மையும் அதனை எளிதில் விளக்குவதற்கு தோற்றி விட்ட புராண வரலாறும் நம் முன்னோரினால் நமக்கு தரப்பட்டுள்ளன.

## தீபாவளிப்பண்டிகை- புராணக்கதைகள்

தீபாவளிப்பண்டிகை இந்து மக்களினால் கொண்டாடப்படுகின்ற குடும்ப ஆன்மீக விழாவாகும். சமூக விழாவாவும் கொள்ளலாம் இந்தியா முழுவதிலும் வாழுகின்ற இந்து மக்கள் ஏன் இலங்கை போன்ற கடல் கடந்த நாடுகளில் வாழுகின்ற இந்து மக்களும் சமய, சமூக, கலாசார ஒருமைப்பாட்டினை உணர்த்தும் முறையில் தீபாவளிப்பண்டிகையை கொண்டாடுகின்றனர்.

தீபாவளி என்பதற்கு தீபங்களின் வரிசை என்று பொருள் கொள்வார். தீபங்களை ஏற்றி ஓர்ஒழுங்கு வரிசையில் வைத்து அவற்றைத் சூழ்ந்து குடும்பத்தினர் சுற்றத்தினர் நண்பர்கள் அமர்ந்து தொல்லைகள் நீங்க சூழ்கலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்க தெய்வ வழிபாடு செய்தலை தீபாவளி குறிக்கின்றது. தீபம் ஒளியைத் தருவது இருளை நீக்குவது அதனால் தீப ஒளி வழிபாட்டிற்குரியதாயிற்று ஒளிவளர் விளக்கு மகாலட்சுமி எனக் கொள்ளப்படுகிறது. அக்கினியில் இறைவனைக் கண்ட மக்கள் விளக்கிலும் கண்டனர். திருவிளக்கு பூஜை வழிபாடு தற்காலத்தில் பிரபல்யம் பெற்று வருதலை நாம அறிவோம்.

'உள்ளொளியும் ஏற்படுத்தல் வேண்டும் அப்போது தான் அளப்பிலா ஆனந்தம் கிட்டும் உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாகில் வாக்கினிலே ஒளி உண்டாகும். என்கிறார் பாரதியார். வாழ்வில் முழுமையான ஒளி புலர்வதற்கு உள்ளத்திலும் வாக்கிலும் உளி ஏற்படுவது அவசியம். தீபாவளி இதனை உணர்த்துகிறது. வட இந்திய மக்கள் தீபாவளி தொடர்பாக கூறும் கதை பின்வருமாறு அமைகிறது.

இராமபிரான் வன வாசத்தை முடித்து அதன் பின் இராவண சங்காரத்தையும் நிகழ்த்தி வெற்றித் திருமகனாக சீதாபிராட்டியுடன் அயோத்திக்கு திரும்பிய திருநாளில் மக்கள் தத்தம் இல்லங்கள் தோறும் தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்து மகிழ்ச்சியைத் தெரிவித்தனர் அதன் பின் ஆண்டு தோறும் அத்திருநாளை நினைவு கூர்ந்து தீபாவளியை கொண்டாடி வருகின்றனர். வட இந்திய மக்கள் இவ்வாறு தீபாவளியின் தோற்றத்தினைக் குறிப்பிடுகின்றனர்.

தென்னிந்திய மக்கள் தீபாவளி தொடர்பாக நரகாசூரன் கதைகைக் கூறுகின்றனர். மகா விஷ்ணுவின் அவதாரங்களுள் ஒருவராக (பன்றி) அவதாரமும் ஒன்று அப்போது பூமாதேவியை மணந்து பெற்ற பிள்ளை நரகாசூரனாகும்.

நரகாசுரன் இறைவனை நோக்கி தவம் செய்து வரங்கள் பலவற்றைப் பெற்றான். வரங்கள் அவனுக்கு வல்லமைகளை வழங்கின.வல்லமைகள் அகங்காரத்தையும் ஆணவத்தையும் வாரி இறைத்தன. நல்லவர் சிறைப்படுத்தப்பட்டனர். வரங்கள் தந்த இறைவனையும் மறந்தான்.செய்நன்றி மறத்தல் அசுரகுணங்கள், ஆலயங்களில் பூஜை ஆராதனைகள் விழாக்கள் நடைபெறுவதற்கு தடை விதித்தான் ஏன் விளக்கு தன்னிலும் ஏற்படக்கூடாது என்று கட்டளை பிறப்பித்தான். எங்கும் ஒரே இருள் மயம் மக்கள் படும் துயர்கள் சொல்லும் தரமல்ல.

நரகாசுரன் கொடுமையின் வடிவமாக தீமையின் ஒட்டுமொத்தமாக இருந்தான் உலகத்தவருக்கு துன்பங்களை இழைத்து வந்தான்.

மகா விஷ்ணு கிருஷ்ணஅவதாரம் எடுத்த போது நரகாசுரனின் அட்டகாசம் அளவைக்கடந்து விட்டது. மக்கள் துவாரகைக்கு சென்று பகவானிடம் முறையிட்டனர். மக்களை பாதுகாக்க கண்ணபிரான் தீருவுளம் கொண்டார். நரகாசுரனை பகற்பொழுதிலோ இரவுப் பொழுதிலோ கொள்ள முடியாது அவன் பெற்ற வரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகையது அவன் மாயவித்தைகளிலும் சிறந்தது இம்மாயங்கள் மாயக்கண்ணிடம் பலிக்குமா? என்ன கிருஷ்ணபகவான் இரவும் பகலுமற்ற ஒரு குறிப்பட்ட வேளையில் சத்தியபாமா தேரைச் செலுத்த போருக்கு புறப்பட்டு சென்று நரகாசுரனை சங்காரம் செயதார்.

நரகாசுரன் இறக்கும் வேளையில் ஞானோதயம் ஏற்பட்டது அதுவும் பகவானின் மறக்கருணையே நரகாசுரன் தான் மக்களுக்கு இளைத்த கொடுமை களையும், அநீதிகளையும் எண்ணி மனம் வருந்தினான். தனது தவறுகளை உணர்ந்து கொண்டான்.

கடைசி நேரத்தில் கண்ணபிரானை வணங்கி பலவாறாகத்துதித்து பகவானிடம் ஒரு வரம் கேட்டான்.

'தந்தையே, என் வாழ்நாளில் நான் செய்த குற்றங்களுக்கு இந்த தண்டனை சரியானதே என்பதை உணர்ந்து கொண்டேன். மமரணத்தை ஏற்க சித்தாயுமுள்ளேன். இந்த நேரத்தில் தனது ஒரே ஒரு வேண்டுதலை தந்து அருள வேண்டும் என்று இரத்து நின்றான்.

நரகாசுரனுடைய கோரிக்கை என்ன என்று கிருஷ்ணபகவான் கேட்டார்.

'நான் தவறுகளை உணர்ந்து மரணத்தை தழுவிய இந்த நாளில் உலகத்தவர் என்னை நினைவு கொள்ளும் வகையில் வரமொன்று அருள வேண்டும்' என நரகாசுரன் வேண்டினான்.

கிருஷ்ணபகவானும் நரகாசுரனை நோக்கி நீ இறக்கும் சதுர்த்தி நாள் ஆண்டு தோறும் நரக சதுர்த்தி என்று அழைக்கப் பெறும் அதனால் உன் நினைவு நிலைபெறும். இத்தித்தில் அதிகாலையில் எழுந்து எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்பவர்களுக்கு கங்கைளயில் ஸ்நானம் செய்தால் கிடைக்கக் கூடிய புண்ணிய பலனை அளிக்கின்றேன். இவ்வாறு எண்ணெய் ஸ்நானம் செய்த பின்பு புத்தாடை அணிந்து என்னை வழிபடுபவர்களுக்கு நல்வாழ்வு கிடைக்க அருள் புரிவேண். இந்த வகையில் உன் நினைவினை ஆண்டுக் கொருதரம் மக்கள் கொண்டாடுவர். என்று கூறி அவன் வேண்டிய வரத்தை வழங்கினர்.

நரகாசுரனும் திருப்தியுடன் உயிர் நீத்தான்.

அதே வேளை நரகாசுரனின் தாயாகிய பூமாதேவியும் கிருஷ்ணபகவானிடம் ஒரு வரம் வேண்டினாள். தனது மகன் இறந்த இத்தினத்தில் ஆண்டு தோறும் மக்கள் ஆயிரம் விளக்குகள் ஏற்ற வேண்டும் என்பதே அந்த வரம் அதனையும் பகவான் வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரகாசுரன் பகவானுடன் இணைந்து விட்டான். அவனின் அசுரக் குணங் களும், அரக்கப்பண்புகளும் அழிக்கப்பட்டன. தேவர்கள் மகிழ்ச்சிய டைந்தனர். மனிதர்கள் சிறை மீண்டனர். வெற்றிக்களிப்பினை விளக்குகள் ஏற்றி பகவானை வணங்கி இன சன பந்துகளுடன் கொண்டாடினர். அன்று தொடங்கிய பண்டிகை இன்று வரையும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

## தீபாவளியின் மகத்துவம்

அறியாமை இருள் அகன்ற நாள் அறிவொளி பரந்த நாள் அசுரத்தன்மை விலக்கிய நாள் தெய்வீகம் பொங்கியெழுந்த நாள் அகந்தை ஒழிந்த நாள் அன்பு மலர்த நாள் அச்சம் கழிந்த நாள் அமைதி பிறந்த நாள் தீயனவெல்லாம் தொலைந்த நாள் நல்லன யாவும் பொழிந்த நாள் அந்த நாள் தான் தீபாவளித்திருநாள்.

தீபாவளித்தினத்தன்று வைகறையில் துயிலெழுந்து நல்லெண்ணெய் தேய்த்து சிரஸ்நானம் செய்ய வேண்டும். அதன் பின் புத்தாடை அணிந்து இஷ்ட தெய்வங்களை வணங்குதல் வேண்டும் தாய் தந்தையர், குரு, மற்றும்பெரியோர்களை வணங்கி அவர்களிடம் நல்லாசிகள் பெறதல் வேண்டும் இயன்றதானதருமங்களைச் செய்தல் அடுத்து இடம் பெறும் பின்னர் உற்றார் உறவினர் நண்பர்களுடன் விருந்துண்டு மகிழ்வார்.

புறத்தூய்மையை நீராடிப் பெற்றுக் கொள்ளுதல் போன்று தீபாவளித் தினத்தில் அத்தூய்மையையும் பெற்றுக் கொள்ளுதல் இன்னியமையாதது நல்ல எண்ணங்கள், சிந்தனைகள், உணர்வுகள் என்பவற்றை நல்லெண்ணெய் ஆகவும் அரப்பாகவும் கொண்டு அழுக்காறு , அவா, கோபம், அகந்தை , செருக்கு, மோகம், பொறாமை, சுயநலம் ஆகிய மன அழுக்குகளை தேய்த்துக்கழுவி நீக்குதல் வேண்டும்.

புறத்தே ஏற்படும் விளக்குகள் கரிய இருளை அகற்றுகின்றன. அஞ்ஞானம் என்னும் அக இருளையும் போக்குதல் அவசியம் அதற்கு உண்மை என்ற ஒளியை உள்ளத்தில் ஏற்றுதல் வேண்டும் எமது உள்ளங்களில் இருந்து எம்மை ஆட்டிப்படைக்கும் கொடிய நரகாசுரனை நாமட வெற்றி கொள்ளும் தினம் தீபாவளித் திருநாள் நரகாசுரனை நாம் வெற்றி கொள்ளும் தினம் தீபாவளித் திருநாள். நரகாசுரன் வேறு யாருமன்று எம்மிடம் உள்ள தீய குணங்கள் கொடிய தன்மைகள் தான் என்பதை உணர்வோமாக.

தீபாவளியின் பொருளை அறிந்து கொண்டாடுவதன் மூலம் மனிதர்கள் ஆவோம்.

## கேதார கௌரி விரதம்

சக்தி விரதங்களுள் கேதார கௌரி விரதமும் சிறப்பாக கொண்டாடப் படுகிறது. இவ்விரதம் புரட்டாதி மாதம் பூர்வபக்க அட்டமியில் ஆரம்பித்து ஐப்பசி மாதத்து அபரபக்க சதுர்த்தியில் நிறைவு பெறுகின்றது. இருப்பத்தொரு நாட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடிக்கும் மகத்தான விரதம் இதுவாகும். இருபத்தொரு நாளும் இவ்விரதத்தை அனுட்டிக்க இயலாதவர்கள் சதுர்த்தி தினத்தில் அன்று ஆகிலும் கேதாரநாதரை குறித்து இவ் விரதத்தை மேற் கொள்ளலாம். உலக மாதா சிவபெருமானை நோக்கி சிவபூசை செய்து இவ்விரதத்தை நோற்றுப் பெரும் பேறு பெற்றாள் என்றால் கேதார கௌரி விரதம் எத்துனை மகிமை வாய்ந்தது என்பதை கூறவும் வேண்டுமோ?

விரதம் தொடங்கும் நாளன்று விரதிகள் கோயிலுக்குச் சென்று வெற்றிலை பாக்கு, பழம், அதிரசம் என்பவற்றில் ஒன்றைப்படைத்து நைவேதனம் செய்து சுவாமி வழிபாடு செய்பவர். முதலாம் நாள் கேதார கௌரி நோன்புக் கயிற்றில் ஒரு முடிச்சுப் போடப்படும். தொடர்ந்து வரும் ஒவ்வொரு நாளும் குறித்த நைவேத்திய வகை ஒவ்வொன்றாக கூட்டப்படும் நிறைவு நாளான இருபத்தோராம் நாள் பழம், பாக்கு, வெற்றிலை, அதிரசம், மஞ்சள் ஒவ்வொன்றிலும் இருபத்தொன்று வீதம் வைத்து நைவேதனம் செய்வர்.நோன்பு நூலிலும் இருபத்தொரு முடிச்சுகள் காணப்படும். ஆடவர் வலக்கையிலும், பெண்கள் இடக்கையிலும் நோன்பு நூலைத் தரித்துக் கொள்வர்.

இருபத் தொருநாளும் விரதம் அனுட்டிப்பவர்கள் முதல் இருபது நாளும் சூரிய அஸ்தமனத்தின் பின்னர் ஒரு நேர உணவு உட்கொண்டு இறுதிநாளான சதுர்தியில் உபவாசம் இருந்து மறுநாள் உதயத்தில் பாராயணம் பண்ணல் வேண்டும் உபவாசம் என்பது உணவு உண்ணாமல் ஐம்புலண்களையும் அடக்கி இறை சிந்தனையுடன் பொழுதைக்கழித்தல் ஆகும்.

விரத நாட்களில் ஆலயங்களுக்கு சென்று சிவாச்சாரியர்கள் இலிங்க பூசை, தேவிபூசை, வசந்த பாராயணம் , திருமுறை பாராயனம், ஓதி தூபதீபம் காட்டு வதை விரதம் அனுட்டிப்பவர்கள் நேரில் தரிசப்பதே அதி சிறப்பாகும். தத்தம் வீடு களில் இருந்து அனுட்டிப்பவர்கள் புனிதமாக சுவாமி அறையில் சிவன் சக்தி தோத் திரங்களை இசைத்து பூவும் நீரும் கொண்டு பக்தி பூர்வமாக அர்ச்சித்து வழிபடலாம். அம்மியையும் குழவியையும் நீரினால் கழுவி அலங்கரித்து மலர்கள் சாத்தி ஆவா கனம் செய்து தூபதீபம் காட்டி வழிபடுகின்ற வழக்கமும் உண்டு அர்ச்சனைகளை வில்வ இலைகளால் செய்வது உத்தமம்.

சர்வமும் சிவம் என்னும் கொள்கையுடையவர் பிருங்கி எனும் நாமத்தையு டைய முனிவர் திருக்கைலாயத்தில் சிவ பிரானை வணங்கச் சென்றிருந்த வேளை சிவன் தனித்திருக்காது பார்வதி பரமேஸ்வரராக சேர்ந்திருக்கக் காணப்பட்டார். சிவனையன்றி வேறொருவரை வணங்கி அறியாத பிருங்கி முனிவர் வண்டுரு எடுத்து பரமேஸ்வரரை மாத்திரம் வலம் வந்து பிரதட்சணம் செய்தார். அம்மையைத்தவிர்த்து விட்டுவிட்டார். முப்பத்து முக்கோடித் தேவர்களும் அம்மை அப்பர் இருவரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம் வந்து வணங்கி நிற்க பிருங்கி முனிவர் சிவனை மாத்திரம் வலம் வந்து வணங்கி நின்றமையும் உலகமாதாவாகிய பார்வதிதேவியை புறக்கணித்தமையும் அம்மையை ஆத்திரங்கொள்ளச் செய்தன. அதனால் பார்வதி தேவி பிருங்கி முனிவரின் சக்தியை அகற்றி அவரை ஆற்றல் அற்றவர் ஆக்கி விட்டார். சக்தியை இழந்த முனிவர் மூர்ச்சையானார். இறைவன் ஊன்று கோல் கொடுத்து முனிவர் மூர்ச்சை தெளிந்ததும் அவரை இருப்பிடம் சேர்ந்தார்.

பார்வதி தேவியார் இவற்றையெல்லாம் கண்ணுற்று தாம் வேறுவேறாக அன்றி இறைவனின் இடைப்பாகத்தில் ஒரே வடிவில் இருந்தால் இத்தகய நிலைமை ஏற்பட்டிருக்காது என்பதை உணர்ந்து பூலோகம் சென்று சிவபெருமானின் உடலில் ஒரு வாமபாகத்தை வேண்டி தவம் இயற்றினார். கௌதம முனிவரின் ஆலோசனைப்படி உமையம்மையார் சிறந்த விரதமாகிய கேதாரீஸ்வர விரதத்தை முறையாக அனுட்டித்தார். பரமசிவன் எழுந்தருளி உமையம்மையை தமது வாமபாகத்தில் அமர்த்திக் கொண்டார். இறைவன் அர்த்தநாரீஸ்வரர் ஆனார். பாதி ஆண், பாதி பெண் ஆகவுள்ள சிவமூர்த்தமே அர்த்தநாரீஸ்வரர் ஆகும். அப்பொழுது இறைவி இறைவனை நோக்கி இவ்விரதத்தை முறைப்படிஅனுட்டிப்பவர் நீண்ட ஆயுளையும் சற்புத்திரப் பேற்றையும் சகல செல்வங்களையும் குடும்ப சுகங்களையும் இம்மையில் பெற்று இறுதியில் தேவரீர் திருவடி தாமரைகளையும் அடைவதற்கு தீருவருள் புரிய வேண்டும் என வேண்டினார் இறைவனும் அவ்வாறு அனுக்கிரகம் செய்து, தேவியோடு அர்த்தநாதீஸ்வரராகத் திருக்கயிலாயதிற்கு எழுந்தருளினார்.

பிருங்கி முனிவரும் சிவனும் சக்தியும் ஒன்றென உணர்ந்து, பழைய உருவைப் பெற்றார். சிவமும் சக்தியும் ஒன்றென, உலகத்தவர்க்குக் காட்டவே இத்திருவிளையாடல் நடந்தது. ஆண், பெண் சமத்துவத்திற்கு இது ஓர் எடுத்துக் காட்டு. கணவனும் மனைவியும் கருத்தொருமித்து நல்வாழ்வு வாழ வேண்டியே கேதார கௌரி விரதம் அனுட்டிக்கப்படுகிறது. குடும்பம், சீரோடும், சிறப்போடும்: செழிப்போடும் சுகத்தோடும் அமைதியுடனும் வாழ சிவசக்தி வழிபாடு இன்றியமை யாதது என்பதை உணர்வோமாக.

தொகுப்பு: – சைவ விழுமியங்கள்
குமாரசுவாமி சோமசுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரடைப்பு

உலகிலேயே அதிகமாக மனிதர்கள் இறப்பதற்கு முதல் காரணம் மாரடைப்பு, எழை, பணக்காரன், ஆண், பெண் என்ற வித்தியாசம் ஏதுமின்றி எல்லோரையும் தாக்குகின்றது. இந்த 'ஆட்கொல்லி' இருதய நோய் மாரடைப்பு வருவதற்கு காரணங்கள்.

அதிக 'கொலஸ்ட்ரால்' ரத்த தமனிகளில் கொழுப்புகள், ட்ரைகிளிசரைடுகள் அதிகமாக இருப்பது பரம்பரை, புகைப் பிடித்தல், அதிக இரத்த அழுத்தம் இன்றைய அவசர வாழ்க்கையில் ஏற்படும் இறுக்கம், நீரிழிவு நோய் போன்றவை.

- இருதய நோய்களை வருமுன் காப்பது நல்லது. இதில் முக்கிய பங்கு வகிப்பது உணவு. இருதய நோயை சமாளிக்க பல வழிகளில் முனைய வேண்டும்.
- சரியான உணவு, உடற்பயிற்சி, நோய் வந்தால் சரியான சிகிச்சை, வாழ்வு முறை களில் மாற்றம், மனநிலையில் அமைதி என்ற பல வழிகளில் இந்த நோயை சமாளிக்க வேண்டும்.
- ஆயுள் வேதத்தில் இருதய நோய்களுக்கு உன்னதமான மருந்துகள் உள்ளன. இம் மருந்துகளுடன் உணவுக் கட்டுப்பாடும் சேர்ந்தால் சிகிச்சை பலனளிக்கும். முதலில் உணவு முறைகளைப் பார்ப்போம்.
- சாப்பிடும் உணவு எவ்வளவு கலோரிகள் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். வயதாக, ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்கு 1500 கலோரிகள் போதுமானது. எல்லோரும் அறிந்தது உணவில் கொழுப்பை குறைப்பது நல்லது.
- வனஸ்பதி, வெண்ணெய் இவற்றை அறவே தவிர்க்கவும். சிறிதளவு உருக்கிய நெய் சேர்த்துக் கொள்ளலாம்.
- நார்ச்சத்து, மாவுசத்தும் மிகந்த கோதுமை, அரிசி, பீன்ஸ், ஓட்ஸ் மாவ, காய்கறி, பழங்கள் போன்ற உணவுகள் நல்லவை. சமையலில் ஆலிவ் எண்ணெய், தானிய எண்ணெய், கடலை எண்ணெய், நல்லெண்ணைய் இவற்றை மாற்றி மாற்றி உபயோகிக்கவும்.
- 4 பேர் உள்ள குடும்பத்திற்கு மாதம் 2 கிலோ எண்ணெக்கு மேல் உபயோகிக்க கூடாது. ஒரு ஆளுக்கு ஒரு நாளைக்கு ஒரு மேஜைக்கரண்டி எண்ணெய் போதுமானது.
- உணவில் கண்டிப்பாக உப்பைக் கறைக்கவும். 2400 மி.கி. உப்பு (சோடியம்) ஒரு நாளுக்கு போதுமானது. முடிந்தால் இந்த அளவையும் குறைக்கவும்.
- உடல் எடையை அதிகரிக்க விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். ஓர் 'வளையம்' போல் வயிற் ற சுற்றி கொழுப்பு இருப்பவர்களுக்கு மாரடைப்பு வர வாய்ப்புக்கள் அதிகம் சுறுசுறுப்பாக இருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை வைத்தியம்

**தூக்கம் இன்மை:-** சில நாள் நன்கு கனிந்த மாம்பழங்களை உண்டு பசுவின் பாலையும் குடிக்கலாம்.

**ஒற்றைத் தலைவலி:-** நாள்தோறும் அதிகாலையில் 4 அவுன்சு திராட்சைப் பழச்சாறு பருகலாம்.

**நரம்புத் தளர்ச்சி:-** கனிந்த மாம்பழச் சாறையும் சுத்தமான தேனையும் கலந்து சாப்பிடுவது நன்று.

**மண்ணீரல் வீக்கம்:-** கனிந்த மாம்பழச் சாற்றை 1 தோலா தேனுடன் கலந்து சாப்பிடலாம்.

**கண்ணீர் வடிதல்:-** வெறும் வயிற்றில் சில வாதாம் பருப்புகளை மென்று தின்னலாம்.

**மாலைக்கண்:-** தண்ணீரில் ஊறவைத்த சீயாக்காய்களை கொதிக்க வைத்து பிசைந்து சிறிது நேரத்தில் தெளிவாக உள்ள தண்ணீரை எடுத்து வைத்தக் கொண்டு படுக்கும் போது 2, 3 துளி கண்ணில் போட்டுவர குணமாகிவிடும்.

**காட்ராக்:-** நோயாளியின் கண்ணில் சாறுபடும்படி 1 கிலோ வெங்காயத்தை நோயாளி நறுக்க வேண்டும். கண்களிலிருந்து தண்ணீர் கொட்டும் போது காடராக்ட் கரையத் தொடங்கும்.

**கண் ஒளி பெருக:-** காலையில் எழுந்தவுடன் மை நீட்டுகிற மாதிரி தேனைத் தடவ வேண்டும். முருங்கைக் கீரையைச் சமையல் செய்து தொடர்ந்து சாப்பிடலாம்.

**பல்வலி:-** இளம் அறுகம்புல்லை வாயில் போட்டு மென்று வலியுள்ள பல்லின் பக்கம் ஒதுக்கி வைத்திருக்க வேண்டும். கொய்யா மரத்தின் கொழுந்தையும் பாவிக்கலாம்.

**காதுவலி:-** 3 வெள்ளைப்பூண்டு பற்களை 2 தோலா வாதுமை எண்ணெயில் அவை கருகும் வரை காய்ச்சி எடுத்த வைத்தக் கொள்க. தேவையான நேரம் 3 சொட்டு காதில் விடவும். தொடர்ந்து உபயோகித்தால் செவிடும் குணமாகும்.

**தொண்டை வலி:-** எலுமிச்சம் பழச்சாற்றை சுடவைத்த சிறிது தேனையும் கலந்து 3 தடவைகள் நக்கிச் சாப்பிடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சலதோசம். இருமல். மார்புச்சளி:-** தேனும் எலுமிச்சம் பழச்சாறும் சமமாகக் கலந்து 1 மேசைக்கரண்டி 2 வேளை சாப்பிட்டு வரலாம். பசுவின் பாலை மஞ்சள் தூள் கலந்து சாப்பிட இருமல் தீரும்.

**க்ஷயரோகம்:-** முதிர்ந்த வேப்பமரத்தின் சமூலத்தை உலர்த்தி இடித்து எடுத்த சூரணத்தில் 10 கிராம் காலையில் பசு நெய்யிலும் மாலை தேனிலும் சாப்பிடலாம்.

**அசீரணம்:-** 2 அவுன்சு தேனை தண்ணீர் கலந்து சாப்பிடுக. ஓமத்தை அரைத்து பசும்பாலில் குடிக்கலாம்.

**வயிற்றுக்கடுப்பு:-** 6 அவுன்சு எலுமிச்சை பழச்சாற்றை தண்ணீரில் கலந்து வேளைக்கு 2 அவுன்சு சாப்பிடலாம்.

**வயிற்றுப்போக்கு:-** கொய்யாமரக் கொழுந்தை கசாயம் செய்து சாப்பிடலாம்.

**வயிற்றுப்புண்:-** மணித்தக்காளி அல்லது பசளைக்கீரையைத் தொடர்ந்து சாப்பிடலாம்.

**இரத்தவாந்தி:-** ஆலம் விதையும் அரசம் விதையும் சம அளவில் அரைத்து பசுவின் பாலில் கலக்கி சாப்பிடலாம்.

**வாந்தி:-** பாதி எலுமிச்சம் பழத்தில் சிறிது சர்க்கரை தூவி உறிஞ்சுக.

**வயிற்றுவலி:-** மாதுளம்பழச் சாற்றுடன் உப்பு மிளகுப் பொடி கலந்து சாப்பிடலாம். அல்லது வெந்நீர் அருந்தலாம்.

**காலரா:-** அடிக்கடி எலுமிச்சம்பழச்சாறு கொடுக்கலாம்.

**மலச்சிக்கல்:-** பப்பாளிப்பழம் அதிகம் சாப்பிடலாம். இரவில் படுக்குமுன் வெந்நீரும் காலை எழுந்தவுடன் குளிர் நீரும் பருகலாம்.

**காமாளை:-** வேப்பமிலைச்சாற்றில் காலை மாலை 1ஃ2 குவளை 3 நாள் சாப்பிடலாம்.

**மகோதரம்:-** மாம்பழம் சாப்பிடலாம் அல்லது உலர்ந்த திராட்சைப்பழம் பாலுடன் சாப்பிடலாம்.

**கல்லடைப்பு:-** உலர்ந்த திராட்சைப் பழமும் பசுவின் பாலுடன் சாப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீர் அடைப்பு:-** ஒரு பிடி அறுகம்புல்லை வேரோடு பிடுங்கி கசாயம் செய்து பாலும் பனை வெல்லமும் சேர்த்து 2 வேளை சாப்பிடலாம்.

**நீரிழிவு:-** 48 நாளைக்க பப்பாசிப்பழம் நாவற்பழம் மாறி மாறிச் சாப்பிடுக அல்லது பிழிந்த எள்ளப் பிண்ணாக்கை சர்க்கரை கலந்து தினசரி 2 வேளை சாப்பிடலாம். அல்லது நாவற்பழக்கொட்டையை உலர்த்தி இடித்து தூள் செய்து வைத்தக் கொண்டு தினசரி 3, 4 தடவை வெறும் வயிற்றில் சாப்பிட்டு தண்ணீர் அருந்தலாம்.

**மலேரியா:-** 9 குப்பைமேனி இலைகள் மிளகு இரண்டையும் அரைத்துச் சாப்பிட்டு உப்பில்லாப் பத்தியம் இருந்தால் காய்ச்சல் நீங்கும்.

**தலைவலி:-** வெங்காயத்தை அரைத்த உள்ளங்காலிலே பற்று போடலாம். எலுமிச்சம்பழத் தோலை அரைத்து நெற்றியில் பற்றப் போடலாம்.

**மூலநோய்:-** குப்பைமேனி இலையை அரைத்த பசும் பாலில் நெல்லிக்காயளவு கரைத்த காலையில் வெறும் வயிற்றில் பாலில் கலக்கி காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடலாம். புளி, மிளகாய், வெல்லம், நல்எண்ணெய் முற்றாக விலக்குக. மிளகாய் அறவே கூடாது.

**விஷக்கடிகள்:-** அறுகம்புல்லை அரைத்த கடிவாயில் வைத்தக் கட்டுக. எருக்கிலையின் பாலைக் கடிவாயில் தடவுவதால் நாய்க்கடி விசம் ஏறாது. ஒரு இலையைத் தின்னலாம்.

**கட்டிகள்:-** வெள்ளைப் பூண்டும் சுண்ணாம்பும் அரைத்து கட்டியின் மீது தடவலாம். துத்தியிலையை அரைத்தக் கட்ட உஷ்ணத்தினால் வந்த கட்டிகள் உடையும்.

**கழுத்து நரம்பின் நசிவு:-** எருக்கம் பூவைச் சூடுகாட்டி ஒத்தணம் கொடுக்கலாம்.

**சிரங்கு, சொறி, கரப்பான்:-** குப்பைமேனி இலையை கறியுப்புடன் அரைத்துப் பூசுக.

**தேமல்:-** 1 வெற்றிலையும் 6 மிளகும் சேர்த்து அரைத்துப் பூசுக. அல்லது பப்பாளிப்பழம் தேய்க்குக.

**தலைப்பாரம்:-** வீபூதி, புழுங்கலரிசி, குரக்கள் ஏதேனும் ஒன்றை பொட்டணமாக்கி தலைவைத்துப் படுக்குக.

**இரத்தசுத்தி:-** தேற்றாங் கொட்டையை பாலில் உரைத்து கடலைப் பிரமாணம் உண்டுவர இரத்தம் சுத்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவு

*வாரியார் சுவாமிகள்*

### சூதினுண வாசைதனி லேசுழலு மீனதென....

மனிதனுக்கு உணவு நியதி இன்றியமையாதது. வாழ்வதற்காக உண்ணவேண்டும். உண்பதற்காக வாழக்கூடாது. பசிக்குச் சாப்பிடவேண்டும். ருசிக்குச் சாப்பிடக்கூடாது. நாவுக்கு அடிமையாகக் கூடாது.

முன் உண்டது நன்றாகச் செமித்த பின்னரேயே அளவறிந்து உண்ணவேண்டும். அவ்வாறு உண்போர் நெடுங்காலம் வாழ்வார்கள்.

*அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு*
*பெற்றான் நெடிதுய்க்கு மாறு*

*- திருவள்ளுவர் -*

காலத்தையும் இடத்தையும் உடல் நிலையையும் நன்கு பார்த்து உணவை ஆய்ந்து துவரப் பசித்தபின் உண்ணவேண்டும். அவ்வாறு உண்போன் நோய், அகால மரணம் முதலிய இடர்களுக்கு ஆளாகமாட்டான்.

*அற்றதறிந்து கடைப்பிடித்து மாறல்ல*
*துய்க்க துவரப் பசித்து*

*- திருவள்ளுவர் -*

உண்ணப்போகும்போது தூய்மையாக இருந்து ஆறுதலுடன், வேகமின்றி, வீண்பேச்சுப் பேசாமல், இடையிடையே தண்ணீர் பருகாமல், நன்கு மென்று அமைதியாகச் சாப்பிட வேண்டும். தண்ணீருக்கும் காற்றுக்கும் சிறிது இடம் வைத்து உண்ண வேண்டும். தலையணைக்குப் பஞ்சு அடைப்பதுபோல் வயிறு புடைக்க உண்ணக்கூடாது. ஓர் உணவுக்கும் மறு உணவுக்கும் இடையே அமுத மேயானாலும் அருந்தக்கூடாது. சிறிது குறைவாகவே உண்பான் இன்பமாக இருப்பான். அதிகமாக உண்பான் நோயினால் துன்புறுவான்.

*இழிவறிந் துண்பான்கண் இன்பம் போல் நிற்கும்*
*கழிபே ரிரையான் கண் நோய்*

*- திருவள்ளுவர்-*

அன்ன விசாரம் அதுவே விசாரமாக இருக்கக்கூடாது. பசியாறிய பின்பும் அடுத்த உணவைப்பற்றிச் சிந்திக்கக்கூடாது. பகலில் உண்ணும் போதே இடைவேளைக்கு என்ன செய்கிறாய்? இரவுக்கு என்ன தயாரிக்கப் போகிறாய் என்று கேட்கிறார்கள். இது உணவு ஆசையை அறிவிக்கிறது. திருவருள் சிந்தனையுடன் உணவு செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கே நோக்கி உண்பார்க்கு ஆயுள் வளரும். மேல்பால் நோக்கி உண்டபார்க்கு செல்வம் வளரும். தென்பால் நோக்கி உண்பார்க்குப் புகழ் வளரும். வடபால் நோக்கி உண்பார்க்கு நோய் வளரும்.

**மார்கழிமலர்**

*கீழ்பால் நோக்கி யினிதுண்டார்க் காயுள் வளரும் கிளர்நிதியம்*
*தாழ்வின் றுயரும் குடதிசையே நோக்கி யருந்தில் தனப்பருஞ்சீர்*
*ஊழில் பெருகும் தென்திசையை நோக்கி யருந்தில் ஒருகாலும்*
*வாழி மாந்தர் வடதிசையை நோக்கி யருந்தல் மாண்பன்றே.*

உணவினாலேயே குணங்கள் மாறுபாடுகின்றன. இலைக்கறி, அவரை, துவரை , அவல், பொரி முதியன சத்துவ குணத்தை வளர்க்கும். பூண்டு, வெண்காயம், முள்ளங்கி, சுரை முதலியன தாமச குணத்தை வளர்க்கும்.

புல் உண்ணுகின்ற ஆடு, மாடு, யானை, முதலியன மந்தை மந்தையாக உலாவி கலந்து வாழ்வதைக் காண்க. புலால் உணவு உண்ணும் புலி, சிங்கம், நாய் முதலியன ஒன்றைக் கண்டால் ஒன்று சீறியும். கடிக்கப்போயும் இகலுவதையுங் காண்க. ஆதலால் ஒவ்வொருவரும் உணவு நியதியைக் கடைப்பிடிக்க வேண்டும்.

தண்ணீரில் பல உயிர்கள் வாழுகின்றன. சூதாக உணவை இரும்பு முள்ளில் கட்டித் தண்ணீரில் விட்டு அசைப்பார்கள். தண்ணீரிலே வாழுகின்ற நண்டு தவளை முதலிய உயிர்கள் அத் தூண்டலில் விழுவதில்லை. ஏன்? அவைகளுக்கு உணவு நசை கிடையாது உணவு விருப்பத்தால், பசி இருப்பினும் இல்லையேனும் இடையறாது தண்ணீரில் எது கிடைக்குமோ என்று அலைந்தவண்ணமாக இருக்கும். மீன் மட்டும் அத் தூண்டலில் வழுந்து துன்பப்படுகிறது.

ஆகவே, மீனைப்போல் நாம் உணவு நசையுடன் திரியக்கூடாது.

## சிந்திக்கச் சிலவரிகள்

- நியாத்தைக் கடைப்பிடிப்பவன் பொறாமையின் மத்தியிலும் முன்னேறுவான். பலமுள்ளவனாக இருக்கவிரும்பினால் உன்னுடைய பலவீனங்களைத் தெரிந்து கொள்.
- நாக்கு கத்தியைக் காட்டிலும் ஆழமாகப் பாயும்.
- தொழில் எத்தனை கீழ்த்தரமாயினும் அவமானமில்லை.
- பிறரிடத்தில் இருந்து நீ என்ன எதிர்பார்கிறாயோ அதையே நீ பிறருக்குக்கொடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தமில்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டே இருப்பதை விடுங்கள்.

- மிகவிரைவாக நண்பர்களைப் பெற்றுக்கொண்டே போகிறனவன் அதிக விரைவாக நண்பர்களை இழந்து கொண்டேவருவான்.
- நாம் எங்கே அதிகம் நம்பிக்கை வைக்கிறோமோ அங்கே நமக்காக பல ஏமாற்றங்களும் காத்திருக்கும்.
- இறைவன் உங்கள் செயல்களை கவனித்து உங்கள் எதிர்காலத்தை இரகசியமாக எழுதுகிறார்.
- நேர்மையாக இருப்பவன் தனிமையானாலும் இறைவன் அவனுக்குத்துணை நிற்பான்
- பிறரை ஆராயாதே.

### மனித தர்மம்

| | | |
|---|---|---|
| ஏழ்மையிலும் | – | நேர்மை |
| கோபத்திலும் | – | பொறுமை |
| தோல்வியிலும் | – | விடாமுயற்சி |
| துன்பத்திலும் | – | தைரியம் |
| செல்வத்திலும் | – | எளிமை |
| பதவியிலும் | – | பண்பு |

## சிந்தனைத் துளிகள்.......

1) ஆசிரியரைவிட நூறு மடங்கு பிதா உயர்ந்தவர். அதைவிட ஆயிரம் மடங்கு உயர்ந்தவர் நம்மைப் பெற்ற தாய்.

2) ஒரு மனிதனை அவனுடைய சூழ்நிலை உருவாக்குவது இல்லை. அவனுடைய மனம்தான் உருவாக்குகிறது.

3) மனிதனை உயர்த்துவது பணம் அன்று பதவி அன்று, குலம் அன்று, பருமன் அன்று, உயரம் அன்று, அறிவு ஒன்றுதான் மனிதனை உயர்த்தும்.

4) ஆசையே மனிதனின் எல்லாத் துன்பங்களிற்கும் அடிப்படைக் காரணம்.

5) உங்கள் கவலைகள் எல்லாவற்றையும் இறைவழிபாட்டால் நிவர்த்தி செய்யுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) ஒரு மனிதனுக்குத் தக்க தருணத்தில் நீ உதவினால்
ஆண்டவனும் தருணத்தில் உதவுவார்.

7) எதுவரினும் அவையெல்லாம் நன்மைக்கே என ஏற்றால்
துயரம் ஒரு போதும் எவரையும் நெருங்காது.

8) இல்லை என்று ஒரு போதும் சொல்லாதே.
உன்னால் இயலாது என்றும் ஒருநாளும் எண்ணாதே.

9) ஒரு மலரில் முள்ளும் உண்டு, மணமும் உண்டு, ஓரே
மனிதனிடம் குறையும் உண்டு, குணமும் உண்டு.

10) பணத்தை நாம் ஆளவேண்டும்.
பணம் நம்மை ஆளவிடக்கூடாது.

11) பாதை வகுத்தபின் பயந்து என்ன லாபம்?
பயணம் நடத்திவிடு கிடைத்திடும் லாபம்.

## உதயவாக்கு

- அதிக ஓய்வு அதிக வேதனையைத் தரும்.
- வளமுடன் வாழும் நண்பர்கள் உன்னை அறிவார்கள்.
- பண்பு அமைவது ஒருவருடைய இளமையில்.
- வறுமையில் நீ நண்பர்களை அறிவாய்.
- தோல்வியை ஒப்புக் கொள்ளத் தயங்காதே.
- வறுமையின் இரகசியம் நம்பிக்கை.
- பக்தியின் உள்ளம் ஆண்டவனின் இருப்பிடம்.
- நம்பிக்கையில் மக்கள் கடவுளாகலாம்.
- உனது பலவீனத்தை பறைசாற்றாதே.
- அன்புள்ள குணம் அலையில்லா நதி.
- தீய ஆசைகளுக்கு அடிமைகளாகாதீர்கள்.
- அமைதி குறையக் குறையத் துன்பம் வளரும்.
- ஒரு வினாடி பொறுமை பத்து வருடச் சுகம்.
- தோல்வியைச் சந்திக்காதவன் பணக்காரன் ஆனதில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

'உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு'
என்றார் வள்ளுவனார்.

அன்பும் பாசமும் கொண்ட மாசற்ற மனத்துடன் எம்மை ஆளாக்கிய பெரியப்பாவே. உங்களை எப்படி எம்மால் மறக்க முடியும் உங்கள் பேரப்பிள்ளைகள் அப்பப்பா என்று கூற நாமும் அப்பப்பா என்று அழைத்த நாட்கள் எம் கண் முன் நிழலாடுகின்றது.

உங்களுடன் ஒன்றாக உங்களது பெற்றெடுத்த பிள்ளைகள் போன்றே உலா வந்தோம். எம்மை நல்வழிப்படுத்தி நல்வாழ்விற்கு இட்டுச் சென்றீர்கள். உங்கள் இறைபக்தி, பிறருக்கு உதவும் குணநலன்கள் பொறுமை இவையெல்லாம் நாம் உங்களிடம் கற்றுக் கொண்ட பாடங்கள்

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்'
என்ற குறட்பாவிற்கேற்ப வாழ்ந்த பெருமைக்குரியவர். நல்லூரான் திருவுடிகளை நாளும் தொழுது அவன் திருவடிகளில் சங்கமமாகிவிட்ட உங்களது ஆன்மா சாந்தி பெறுவதாக.

கண்ணீருடன்
**சந்திரன் சுகி**
**சகோதரர்கள் லண்டன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
1933.04.20

இறப்பு
2013.07.14

அமரர்

## ஆறுப்பிள்ளை கதிரவேலு

ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி
சீர் சிறப்பாய் வாழ்ந்திருந்த ஐயாவே
பிள்ளைகள் கதறி அழ ஊரார் புலம்பி அழ
உற்றார் விம்மி அழ எமை விட்டு பிரிந்ததேனோ
கதிரவேல் ஐயா என்று குழந்தைகள் முதல் பெரியோர் வரை
அன்பாக அழைத்திருந்த உங்களை பிரிந்து இன்று தவித்து
நிற்கிறோம்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

அன்னாரின் பிரிவால் துயர் உற்று இருக்கும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கீர்த்தனா களஞ்சியம்
இராமலிங்கம் வீதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



14.07.2013 அன்று எமைவிட்டுப் பிரிந்த

எமது தந்தை

**அமரர் உயர்திரு ஆறுப்பிள்ளை கதிரவேலு**

அவர்கள் சிவபதமடைந்த செய்தி அறிந்து

நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் அனுதாபம்

தெரிவித்தவர்களுக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில்

கலந்து சிறப்பித்தவர்களுக்கும் மற்றும் தேவையான

போதெல்லாம் சகல உதவி ஒத்தாசைகள் புரிந்த உற்றார்,

உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும்

எமது மனப்பூர்வமான நன்றிகளைத்


தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

**இங்ஙனம்**
**பிள்ளைகள்**
(ஜேர்மனி, கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



MATHI COLOURS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org